கால்நடை பராமரிப்பு, பால்வளம்,
மீன்வளம்மற்றும்மீனவர்நலத்துறை

# பால்வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021–22

## மானியக் கோரிக்கை எண்.8

சா.மு.நாசர்
பால்வளத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | ப. எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | மாநிலத்தில்பால் கூட்டுறவு சங்கங்களின் மேலாண்மை | 24 |
| 3. | தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் | 27 |
| 4. | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்ஒன்றியங்கள் | 37 |
| 5. | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் | 42 |
| 6. | கால்நடை வளங்கள் | 70 |
| 7. | பால் கொள்முதல் | 72 |
| 8. | பால் விற்பனை | 80 |
| 9. | தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் | 105 |
| 10. | மாநில / ஒன்றிய அரசு நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பால்பண்ணை வளர்ச்சி திட்டங்கள் | 112 |
| 11. | முக்கிய உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நு பங்களை சார்ந்த திட்டங்கள் | 123 |
| 12. | சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் நிதி செயல்பாடு | 132 |

| வ. எண். | பொருள் | ப. எண். |
|---|---|---|
| 13. | பல்வேறு அரசுத்துறைகளுடனான ஒருங்கிணைப்பு | 144 |
| 14. | பணியாளர் நலன் சார்ந்த நடவடிக்கைகள் | 145 |
| 15. | பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் | 150 |
| 16. | பால்வளத்துறையின் எதிர்காலத் திட்டங்கள் | 161 |
| 17. | பால் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல் | 178 |
| 18. | முன்னேற்ற நடவடிக்கைகள் | 183 |
| 19. | நிதி ஒதுக்கீடு | 186 |
| 20. | முடிவுரை | 188 |

# பால்வளத்துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு 2021–2022

## 1. முன்னுரை

பால் அனைத்து வயதினருக்கும் ஊட்டச்சத்து அளிக்கக்கூடிய முழு உணவாகும் (Complete food). மதிப்புக்கூட்டப்பட்ட பல்வேறு பொருட்களை தயாரிப்பதற்கும் பால் பயன்படுகிறது. நகரமயமாக்கலைத் தொடர்ந்து பாலின் தேவை அதிகரித்து வருகிறது. நகர்ப்புறங்களின் பாலின் தேவைக்கு கிராமங்களையே சார்ந்துள்ளதாலும், கிராமப்புறத்திலிருந்து பாலின் ஆரம்ப தர நிலையை பாதுகாத்து நகரத்திற்கு கொண்டு வர வேண்டியது அவசியமாகிறது.

வெண்மைப்புரட்சியின் காரணமாக நமது நாட்டில் பால் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது. நாற்பது வருடங்களுக்கு முன்பு பால் மற்றும் பால் பொருட்கள் அதிகமான அளவில் இறக்குமதி செய்து வந்த நிலையில் இருந்து, தற்போது நமது நாட்டின் 130 கோடி மக்கள்

தொகையின் பால் மற்றும் பால் பொருட்களின் தேவையினை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் உலக நாடுகளுக்கு பால் பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற நிலைக்கு உயர்ந்து உள்ளோம்.

தேசிய பால்வள வாரியம் அமல்படுத்திய வெண்மை புரட்சி (Operation Flood) பால் உற்பத்தி திட்டங்கள் வாயிலாக கிராமங்களில் அதிகமான எண்ணிக்கையில் "ஆனந்த் மாதிரி" கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கின்ற பாலினை விரயம் செய்யாமல், பாதுகாத்து பதப்படுத்தி பெருநகர மக்களின் பால் தேவையினை பூர்த்தி செய்வதன் மூலம் கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் வழங்குகின்ற பாலுக்கு நிரந்தர சந்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கிய பாலுக்கு உண்டான கிரயத் தொகை உடனுக்குடன் காலதாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகரங்கள், இரண்டாம் நிலை நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் பாலின் சந்தை தொடர்ந்து விரிவாக்கம் செய்யப்பட்டு வந்த நிலையில் உற்பத்தி செய்கின்ற பால், தேக்கம் இன்றி விற்பனை செய்யப்பட்டதன் விளைவாக பாலின் தேவை அதிகரித்துள்ளது. ஒன்றிய, மாநில அரசுகள் பால்பண்ணைத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொண்டதன் மூலமாக பால் உற்பத்தியில் 188 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து உலக அளவில் இந்தியா முதலிடம் வகிக்கிறது.

இந்தியாவில் மொத்த பால் உற்பத்தியில் சிறு/குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்களின் பங்களிப்பு 70%க்கு அதிகமாக உள்ளது. இவர்களால் தான் உலக அளவில் இந்தியா 1997 முதல் பால் உற்பத்தியில் முதல் இடத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது என்பது மிகவும் பெருமைபடக் கூடியதாகும்.

**இந்திய பால்வளத்துறையின் வலிமை:**

- 120 மில்லியன் மக்கள் நேரடியாக பால் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்

- இந்தியா உலக அளவில் மக்கள் தொகையில் இரண்டாம் இடத்தில் இருப்பதோடு பொருளாதார அடிப்படையில் வேகமாக வளர்கின்ற நாடுகளின் பட்டியலில் இருக்கிறது

- சர்வதேச அளவில் பால் மற்றும் பால் பொருட்களுக்கான சந்தை மதிப்பு மிகவும் பெரியது

- மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருகிறது. மக்களிடையே உடல் ஆரோக்கியம் சம்பந்தமான விழிப்புணர்வு அதிகரித்து வருவதாலும், பால் மற்றும் பால் பொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது

- பால் பண்ணைத் தொழில் சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர்களுக்கு வருடம் முழுவதும் கூடுதல் வருமானம் ஈட்டி தருவதுடன் தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளிக்கக் கூடிய துறையாகவும் விளங்குகிறது
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாலின் பங்களிப்பு 4.2% ஆக உள்ளது

## 1.1 தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு அமைப்புகள்

இந்திய அளவில் கூட்டுறவு அமைப்புகள் கொள்முதல் செய்கின்ற பால் அளவின் (Procurement Volume) அடிப்படையில் ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு 41 இலட்சம் லிட்டர் பாலினை கொள்முதல் செய்து மூன்றாவது இடத்தில் உள்ளது. (முதலாம் இடம்: குஜராத் 275 LLPD, இரண்டாம் இடம்: கர்நாடகா–73 LLPD)

அதிகமாக பால் உற்பத்தி செய்கின்ற மாநிலங்களில், தமிழ்நாடு நாளொன்றுக்கு 233 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து பத்தாவது இடத்தில் உள்ளது.

வெண்மைப் புரட்சியின் தந்தை டாக்டர் வர்கீஸ் குரியன் முன்னோடியாக அறிமுகப்படுத்திய "ஆனந்த் மாதிரி" முறையில், 3 அடுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளின் சங்கங்கள் வெவ்வேறு நிலைகளில் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்கங்களால் கொள்முதல் செய்யப்படும் பாலில் இருந்து பல்வேறு மதிப்பு கூட்டிய பால் பொருட்கள் தயாரிக்கப்பட்டு "ஆவின்" என்ற வணிகப் பெயரில் விற்பனை செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், நாளொன்றுக்கு 233 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் உறுப்பினர்களாக உள்ள 9,426 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களைச்

சார்ந்த 4.25 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற 41 இலட்சம் லிட்டர் பாலில், உள்ளூர் விற்பனைக்கு 4 இலட்சம் லிட்டர் பால் போக, சராசரியாக 37 இலட்சம் லிட்டர் பாலை தாங்கள் உறுப்பினர்களாக உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு வழங்கி வருகின்றனர். தமிழகத்தின் மொத்த பால் உற்பத்தியில், கூட்டுறவு அமைப்புகளின் பங்களிப்பு 17.60 சதவிகிதம் ஆகும்.

நுகர்வோர்களுக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்திடும் பொருட்டு பால் தரக்கட்டுப்பாட்டு பிரிவின் மூலம் பல்வேறு நிலைகளில் பால் தரப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

பாலில் கலப்படத்தைக் கண்டறிய பால் குளிரூட்டும் நிலையங்கள், ஒன்றிய பால்பண்ணைகள் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலைகள் மற்றும் பெருநகர பால் பண்ணைகளில் பாலுக்கான தரப்பரிசோதனைகள்

மேற்கொள்ளப்படுகின்றன. பாலில் கலப்படப் பொருள் எதுவும் இல்லை என்று உறுதிப்படுத்திய பிறகு, பதப்படுத்தப்பட்டு நுகர்வோர்களுக்கு, பால் பாக்கெட்களாக விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

பால் கொள்முதல் குறையும் காலங்களில், இணையம் மற்றும் மாவட்ட பால் ஒன்றியங்களின் இருப்பில் உள்ள பால்பவுடர் மற்றும் வெண்ணெய் கொண்டு மறுஉருவாக்கம் (Reconstitution) செய்வதன் மூலம், பால் பற்றாகுறைவிற்கு தீர்வு காணப்படுகிறது. இதன் மூலம் பெருநகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் உள்ள நுகர்வோர்களின் பால் தேவையை, முழுமையாக ஆவின் நிறுவனம் பூர்த்தி செய்கிறது.

பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படுகின்ற வருவாயினை காலதாமதம் இன்றி மாவட்ட ஒன்றியங்களுக்கும் பிறகு பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும் அனுப்பப்படுகிறது. பிறகு பால் உற்பத்தியாளர்கள் வழங்கிய பாலின் தரம் மற்றும் அளவின் அடிப்படையில் அதற்கான பணத்தினை

மின்னணு தீர்வு மூலம் (Electronic Clearance System (ECS)) அவர்களுடைய வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்படுகிறது.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், விடுமுறையின்றி வருடத்தில் 365 நாட்களும் காலை மற்றும் மாலை இரு வேளைகளிலும் பால் ஊற்றும் உறுப்பினர்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்து வருகின்றன. மேலும் பால் ஊற்றும் உறுப்பினர்களுடன் நேரடி தொடர்பு கொண்டுள்ளதால் அவர்களின் பிரச்சினைகளை விரைவில் தீர்த்து வைக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உதவுகின்றன.

சென்னை பெருநகர மொத்த பால் விற்பனையில் ஆவின் பங்கு 52 சதவீதமாகும். (13.5 இலட்சம் லிட்டர்) தனியார் மற்றும் முறைப்படுத்தப்படாத பால் விற்பனையாளர்களின் பங்கு 48 சதவீதமாகும். (12.5 இலட்சம் லிட்டர்)

இதனால், தினமும் 4.25 இலட்சம் சிறு, குறு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு வருடம் முழுவதும் கூடுதல் வருமானம் அளிப்பதோடு வேலைவாய்ப்பினையும் பால் பண்ணை தொழில் உறுதி செய்வதுடன் கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுகிறது.

## 1.2 பால்வளத்துறை செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் 1958ம் ஆண்டு பால்வளத் துறை என்று தனி அரசுத் துறை துவக்கப்பட்டது. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் / இயக்குநர், இத்துறையின் தலைவராக செயல்படுவதுடன் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களின் செயல் பதிவாளராகவும் செயல்படுகிறார். கூட்டுறவுத் துறையில் இருந்து வந்த அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களின் மீதான சட்டப் பூர்வ மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள், 01.08.1965 அன்று பால்வளத் துறைக்கு மாற்றப்பட்டது.

பின்னர், 1972 ஆம் ஆண்டில் இத்துறையின் வணிக நடவடிக்கைகள் அனைத்தும், கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. மேலும் 1981 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 'ஆனந்த்' மாதிரி மூன்றடுக்கு பால் கூட்டுறவு முறை உருவாக்கப்பட்ட போது தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதன்மை நிலை சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு மாற்றப்பட்டன. பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மேலாண்மை இயக்குநராகவும் செயல்படுகிறார்.

### 1.2.1 குறிக்கோள்கள்

- பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு நியாயமான விலை வழங்கப்படுவதை உறுதி செய்தல்

- நுகர்வோர்களுக்கு தூய்மையான பதப்படுத்தப்பட்ட பால் வழங்கப்படுவதை உறுதி செய்தல்

- பால் கூட்டுறவுகளில் நிர்வாக வெளிப்படைத் தன்மை மூலம் நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதை உறுதி செய்தல்

- இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணயத்தின்படி பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை உறுதி செய்தல்

- ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புக்குள் இல்லாத பால்பண்ணை அமைப்புகளை ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புக்குள் கொண்டு வருதல்

- பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு தீவனம் உள்ளிட்ட இடுபொருட்கள் மற்றும் கால்நடை மருத்துவ சிகிச்சை போன்ற சேவைகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்

- இதர தொழில்துறை வளர்ச்சிக்கு ஈடாக பால்பண்ணைத் துறையும் சீரான வளர்ச்சி அடைவதை உறுதி செய்தல்

- பால் உற்பத்தியாளர்கள் அளவில், சங்கங்கள் அளவில், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணைய அளவில் பல்வேறு பால் பண்ணை நடவடிக்கைகளில் சமீபத்திய புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப் படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்

### 1.2.2 உத்திகள் / புதிய வழிமுறைகள் / வழிகாட்டுதல்கள் / யோசனைகள்

பால்வளத்துறையின் குறிக்கோள்களை நிறைவேற்ற பின்வரும் உத்திகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

- கூட்டுறவு அமைப்பின் கீழ் அதிக எண்ணிக்கையில் பால் உற்பத்தியாளர்களை கொண்டு வருதல், அனைத்து கிராமங்களையும் உள்ளடக்கி பால் கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல் மற்றும் செயலிழந்த

சங்கங்களை செயல்படும் சங்கங்களாக மறுமலர்ச்சி செய்தல்

- அனைத்து பால் கூட்டுறவுகளிலும் ஒருங்கிணைந்த பால்பண்ணை மேலாண்மை அமைப்பை ஏற்படுத்துதல்

- அனைத்து பால் கூட்டுறவுகளிலும் தூய பால் உற்பத்தியினை நடைமுறைப்படுத்துதல்

- பல்வேறு கொள்ளளவுகளில் மொத்த பால் குளிர்விப்பான்கள் மையங்களை அதிக எண்ணிக்கையிலான சங்கங்களில் நிறுவுதல் மற்றும் தானியங்கி பால் சேகரிப்பு கருவிகளை பொருத்துதல் மூலமாக அனைத்து நிலைகளிலும் முறையாக பாலின் குளிர்வு நிலை பராமரிக்கப்பட்டு அதன் ஆரம்ப நிலை தரத்தினை உறுதிப்படுத்துதல்

- அதிகரித்துள்ள பால் உற்பத்தியை எதிர் கொள்ள ஏதுவாக அனைத்து பால்பண்ணைகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

- பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் தொழிலில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்

- பால் உற்பத்தியை அதிகரித்திட ஒன்றிய, மாநில அரசுகளின் திட்டங்களையும் ஒன்றிய மாநில அரசுகளின் பங்களிப்பு மற்றும் நிதி உதவியுடன் கூடிய திட்டங்களையும் செயல்படுத்துதல்

- விற்பனையை மேம்படுத்திட புதிய பால் பொருட்களை அறிமுகப் படுத்துதல் மற்றும் புதிய விற்பனை உத்திகளை மேம்படுத்துதல்

- பால்அட்டை விற்பனையை அதிகரித்தல், மின்னணு விற்பனையை அதிகரித்தல் மற்றும் 24 மணி நேரமும் இயங்கும் நுகர்வோர் குறைதீர்வு மையங்கள் மூலம் பெறப்படும் நுகர்வோர் குறைகளை தீர்வு செய்வதன் மூலம் நுகர்வோர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துதல்

- உணவுப் பாதுகாப்பு சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011ன் வழிகாட்டுதல்களை அனைத்து பால் கூட்டுறவுகளிலும் செயல்படுத்துதல்

### 1.2.3 நிர்வாக அமைப்பு

தலைமைச் செயலகத்தின் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பால்வளத்துறையின் துறைத் தலைவராக பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் / இயக்குநர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர் அவர்கள் தலைமையில் சென்னை மாதவரம் பால் பண்ணையில் பால்வளத்துறையின் தலைமை அலுவலகம் இயங்கி வருகிறது. மேலும் மாவட்ட அளவில் சரகங்களில் 29 துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களும் கடந்த ஆண்டு முதல் மதுரையில் மண்டல துணைப் பால் ஆணையர் அலுவலகம் ஒன்றும்


இயங்கி வருகின்றன. பால்வளத்துறை இயக்குநர் அவர்களுக்கு அலுவலக பணிகளில் உதவிட தலைமை அலுவலகத்தில் ஒரு கூடுதல் பால் ஆணையர், ஒரு துணைப் பதிவாளர் (தலைமையகம்) மற்றும் ஒரு துணைப் பதிவாளர் (சட்டப்பணிகள்) ஆகியோரும் பணியாற்றி வருகின்றனர். இத்துறைக்கென களப் பணியாளர்கள் உள்ளிட்ட 800 பணியாளர்கள் கொண்ட பணிநிலை திறன் அனுமதிக்கப் பட்டுள்ளது.

மேலும், பால் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் என்ற முறையில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் / இயக்குநர் அவர்கள், 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் 1988–ன் கீழ் அதிகாரப்படுத்தப்பட்டுள்ளபடி புதிய பால் கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல், பால் கூட்டுறவு சங்கங்களை ஆய்வு செய்தல், தகராறுகளை தீர்த்தல், மூன்றடுக்கு சங்கங்களுக்கு

நிர்வாகக்குழுவை தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்துதல், பொது மக்கள் நலன் கருதி உரிய அறிவுரைகள் வழங்குதல் போன்ற சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

உணவுப் பாதுகாப்பு சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 நடைமுறைப்படுத்தும் முன்னர், பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 1992ன்படி பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர்/இயக்குநர், மாநில பதிவாளராக அதிகாரப்படுத்தப்பட்டிருந்தார். எனினும், உணவுப் பாதுகாப்பு சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் மேற்படி அதிகாரம் உணவுப் பாதுகாப்பு துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. உணவுப் பாதுகாப்பு சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011ன் கீழ், நுகர்வோருக்கு தரமான பால் வழங்கப்படுவதை கண்காணித்து உறுதி செய்ய நியமிக்கப்பட்ட மாநில கண்காணிப்பு குழுவின் உறுப்பினராக, பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் / இயக்குநர் செயல்பட்டு வருகிறார்.

# பால்வளத்துறையின் நிர்வாக அமைப்பு



### 1.2.4 துணைப்பதிவாளர் களின் (பால்வளம்) கடமை மற்றும் பொறுப்புகள்

- தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளில் பதிவாளருக்கான சட்டப்பூர்வ அதிகாரங்களை மாவட்ட அளவில் செயல்படுத்த துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது
- தனது அதிகார வரம்பில் உட்பட்ட பகுதிகளில் புதிய பால் கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்யக்கோரி பெறப்படும் விண்ணப்பங்களை, களப் பணியாளர்களின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் ஆராய்ந்து பின்னர் சாத்தியக் கூறுகள் இருக்கும் அடிப்படையில் பால் கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்தல்
- மாவட்ட அளவில் செயல்படும் பால் கூட்டுறவு அமைப்பின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்து செயல்படுத்துதல்

- பால் உற்பத்தியாளர்களிடமிருந்து சேகரிக்கும் பால் பரிசோதனை செய்யப்பட்டு தரமான பால் கொள்முதல் செய்வதை உறுதி செய்தல்
- பால் உற்பத்தியாளர்களுக்கு, அவர்கள் வழங்கிய பாலின் தரத்திற்கு ஏற்ப பால் பணப்பட்டுவாடா நிலுவையின்றி வழங்கப் படுவதை உறுதி செய்தல்
- பால் கூட்டுறவு சங்கங்களில் ஏற்படும் நிதியிழப்பிற்கு பொறுப்பான நபர்கள் மீது நீதித்துறை நடுவர் அதிகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தல்
- செயலற்ற சங்கங்களை புதுப்பிக்கவும், கலைக்கப்பட்ட சங்கங்களை புத்துயிரூட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுடன் இணைந்து பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாட்டுக் கடன்களை பெற்றுத்தருதல்
- மாவட்ட தேர்தல் அலுவலர் என்ற அடிப்படையில் தனது எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கூட்டுறவு பால்

உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு தேர்தலை நடத்த தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- பால் கூட்டுறவுகளுக்கான மூன்றடுக்கு பால் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழு பதவிக்காலமான 5 ஆண்டுகள் முடிவுறும் போது புதிய நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுக்க, தமிழ்நாடு கூட்டுறவு சங்க தேர்தல் ஆணையத்தின் தேர்தல் திட்டம் பெற்று அதன்படி தேர்தல் நடத்தவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- உணவுப் பாதுகாப்பு சட்டம் 2006–ன் கீழ் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்ட மாவட்ட கண்காணிப்பு குழுவின் ஒரு உறுப்பினராக செயல்படுதல்
- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து விவசாயிகளுக்கு கால்நடை தீவனம், தாது உப்புக் கலவை,

பசுந்தீவனம் மற்றும் இதர உள்ளீடுகளை பெற்று வழங்குதல்

- மாவட்ட ஒன்றியங்களின் நிர்வாக செயல்பாடுகள், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், விதிகள், துணைவிதிகள் மற்றும் பணியாளர் சிறப்பு துணைவிதிகளுக்குட்பட்டு செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் ஒன்றிய நிர்வாகக் குழுவின் செயல் இயக்குநர்களில் ஒருவராக பணியாற்றுதல்

## 2. மாநிலத்தில் பால் கூட்டுறவு சங்கங்களின் மேலாண்மை

தமிழ்நாட்டில் உள்ள பால் கூட்டுறவு அமைப்புகள் "ஆனந்த் மாதிரி" 3 அடுக்கு முறையின் கீழ் செயல்படுகின்றன. அதன் விவரங்கள் பின் வருமாறு:

### அடுக்கு–1

**கிராம அளவில்** செயல்படும் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் மூன்றடுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளின் அடித்தளமாக செயல்படுகின்றன. இந்த கூட்டுறவு அமைப்புகள் பால் உற்பத்தியாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளன. உறுப்பினர் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்து உள்ளூர் தேவைக்காக ஒரு பகுதியை விற்பனை செய்த பிறகு எஞ்சிய உபரிப்பாலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு வழங்கி வருகின்றன.

அடுக்கு–2

**மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களானது**, நடு அடுக்கு அளவிலான கூட்டுறவு சங்கங்கள் ஆகும். அதன் விவகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், இதில் உறுப்பினர்களாக உள்ளனர். அந்த உறுப்பினர் சங்கங்களிலிருந்து உபரி பாலை வாங்கி, பதப்படுத்தி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கிறார்கள். மேலும், பால் பொருட்கள் தயாரிப்பதுடன் உபரியாக உள்ள பால், பால்பவுடராகவும் உருமாற்றம் செய்யப்படுகிறது.


அடுக்கு–3

**தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்** என்பது மாநில அளவிலான தலைமை பால் கூட்டுறவு சங்கமாகும். இதில் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இணையமானது, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் இருந்து பாலை கொள்முதல் செய்து பதப்படுத்தி, சென்னை

பெருநகர பால் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்து வருகிறது.

பிற கூட்டுறவு அமைப்புகள் போன்றே 3 அடுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளும் 1983ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் 1988 ன்படி நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

மூன்றடுக்கு பால் கூட்டுறவு அமைப்பு



## 3. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள்

முன்னர், பிரதம பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புறங்களில் உபரிப்பாலினை கொள்முதல் செய்து அப்பாலினை பிற கிராமங்களில் விற்பனை செய்து வந்தன. தற்போது பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களானது கிராமப்புறங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களாகவும், நகர்ப்புறங்களில் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன.

### 3.1 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்

#### 3.1.1 கட்டமைப்பு அம்சம்

தமிழகத்தில் குஜராத் மாநிலத்தின் அமுல் நிறுவனத்தை போன்று மூன்றடுக்கு 'ஆனந்த் மாதிரி' பின்பற்றப்படுகிறது. அம் மூன்றடுக்கு அமைப்பில் அடித்தள அமைப்பாக, தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைகின்றன. இவை கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டு, கிராம அளவில் பால் உறுப்பினர்களிடமிருந்து உற்பத்தி செய்யப்படும்

பாலை சேகரித்து, அதில் சிறிய பகுதியை உள்ளூரில் விற்பனை செய்தது போக எஞ்சிய உபரிப்பாலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன.

பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி இயற்றப்படும் அரசின் கொள்கைகள் மற்றும் பல்வேறு திட்டங்களை இறுதி பயனாளிகளான பால் உற்பத்தியாளர்களுக்கு கொண்டு செல்வதில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பாலமாக விளங்குகின்றன. சங்கத்தின் செயல்பாட்டு பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உறுப்பினர்களாக ஆவதற்கு தகுதியுடையவர்கள். தேவைப்படும் நேர்வுகளில் சாத்தியமான இடங்களில் பிரத்தியேகமாக மகளிர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

### 3.1.2 செயல்பாட்டு அம்சம்

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அதன் உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை கொள்முதல் செய்து அதற்கு கட்டுப்படியாகின்ற விலை பெற்று தருவதை முக்கிய நோக்கமாக கொண்டு செயல்படுகின்றன. சங்கத்தில் பால் உற்பத்தி செய்யும் உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு, மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்வதோடு, கால்நடை தீவனம் மற்றும் பிற உள்ளீடுகளையும் பெற்று வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

கிராம அளவில் 10,511 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அவற்றில் 1,893 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களும் 123 ஆதிதிராவிடர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நாளொன்றுக்கு சுமார் 41 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில், உள்ளூர் தேவையை

பூர்த்தி செய்வதற்காக சுமார் 4 இலட்சம் லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது. எனவே நாளொன்றுக்கு சுமார் 37 இலட்சம் லிட்டர் பால், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் பெருநகர பால்பண்ணைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்களின் தேவைக்கு ஏற்ப வாரம் ஒரு முறை / பத்து நாட்களுக்கு ஒரு முறை / பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அடிப்படையில் பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலின் தரத்தின் அடிப்படையில் பால்பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

### 3.1.3 புதிய பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைத்தல்

புதிய சங்கம் பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்ட கிராமத்தில் சங்க உறுப்பினராக சேர்க்க, அதே கிராமத்தில் வசிக்கும் குறைந்தபட்சம் 25 தகுதிவாய்ந்த குடிமக்கள், பால் கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்ய கோரி சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணைப்பதிவாளர் (பால்வளம்)

அவர்களுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

முதுநிலை ஆய்வாளர்கள் (பால்) அல்லது மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் விரிவாக்க அதிகாரிகள் கள ஆய்வை மேற்கொண்டு, கறவைகளின் எண்ணிக்கை, அப்பகுதியில் உள்ள பால் உற்பத்தித் திறன், பால் வழித்தடம் கிடைக்கும் தன்மை, இலாபத்தில் செயல்படுவதற்கான வாய்ப்புகள், பாலின் தரம் ஆகியன குறித்து ஆய்வு மேற்கொள்வார்கள்.

முன்மொழியப்பட்ட சங்கத்தின் விவகார எல்லை மற்றொரு பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் செயல்பாட்டு எல்லையுடன் ஒன்றுடன் ஒன்று சேர்க்கக் கூடாது. இருப்பினும், மகளிர் அல்லது ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்கள் அதே பகுதியில் செயல்படும் போது, பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் செயல்பாடுகளை பாதிக்காமல்

முடிந்தவரை ஒரே பகுதியில் பதிவு செய்யப்படுகின்றன. சங்கம் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதன்மை அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். மேலும் உறுப்பினர்கள் அப்பகுதியை சார்ந்தவர்கள் என்பதற்கான குடியிருப்புக்கான ஆதாரம், உள்ளூர் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் நிலுவையின்மைச் சான்று உள்ளிட்ட முழு வடிவத்தில் முன்மொழிவுடன் சமர்ப்பிக்க வேண்டும். முன்மொழிவு பெறப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் துணைப்பதிவாளர் (பால்வளம்) சங்கத்தை பதிவு செய்வார். எந்தவொரு குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி முன்மொழிவு துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களால் 120 நாட்கள் கால எல்லைக்குள் திருப்பித் தரப்படாவிட்டால், அது பதிவு செய்யப்படவில்லை என்றாலும், துணைப்பதிவாளர் (பால்வளம்) கால வரம்பின் கடைசி தேதியில் அத்தகைய சங்கம் பதிவு செய்யப்பட்டதாக கருதப்படும்.

## 3.2 செயலிழந்த சங்கங்களை மறுமலர்ச்சி செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

தமிழகத்தில், 1,085 செயலிழந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இரண்டு ஆண்டுகளுக்குள் செயலிழந்த நிலையில் இருக்கும் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களை புதுப்பிக்கவும், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக செயலற்ற நிலையில் உள்ள சங்கங்களுக்கு மாற்றாக அதே பகுதியில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த ஓராண்டில் மட்டும் 72 செயலற்ற சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்படும் போது சங்கங்கள் எளிதாக பால் கொள்முதல் மற்றும் பால் விற்பனையினை மேற்கொள்ள மானிய விலையில் சங்கங்களுக்கு இரண்டு பால் கேன்கள் அந்தந்த மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்

ஒன்றியங்கள் மூலமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் வங்கிகளுடன் இணைந்து கறவை மாட்டுக்கடன் பெற்று வழங்குதல் மற்றும் (DEDS) திட்டத்தின் கீழ் மானிய விலையில் கறவை மாட்டுக்கடன் பெற்று வழங்குதல் ஆகிய பணிகளின் மூலம் பால் உற்பத்தியினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தனியார் நிறுவனங்களுக்கு பால் வழங்கிவரும் பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பால்பணத் தொகையினை உடனுக்குடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகள் மூலமாக செயலிழந்துள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை புதுப்பித்து பால் உற்பத்தியினை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ஒன்றியம் வாரியாக சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் விவரங்கள்

(15.08.2021 அன்று உள்ளபடி)

| வ.எண் | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பெயர் | சங்கங்களின் எண்ணிக்கை | செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை | செயலற்ற சங்கங்களின் எண்ணிக்கை | பால் ஊற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | கூட்டுறவின் கறவைமாடுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்<br>திருவள்ளூர் | 349<br>242 | 300<br>174 | 49<br>68 | 13,608<br>4,671 | 0.68 |
| 2 | விழுப்புரம் | 602 | 602 | 0 | 35,135 | 1.64 |
| 3 | கடலூர் | 220 | 175 | 41 | 7,012 | 0.15 |
| 4 | வேலூர் | 359 | 319 | 40 | 19,090 | 1.22 |
| 5 | திருவண்ணாமலை | 671 | 608 | 63 | 44,674 | 1.78 |
| 6 | கிருஷ்ணகிரி | 310 | 238 | 72 | 8,802 | 0.32 |
| 7 | தர்மபுரி | 291 | 265 | 26 | 12,911 | 0.52 |
| 8 | சேலம் | 804 | 768 | 36 | 46,936 | 1.87 |
| 9 | நாமக்கல் | 538 | 513 | 25 | 16,650 | 0.53 |
| 10 | ஈரோடு | 526 | 511 | 15 | 28,815 | 0.55 |
| 11 | திருப்பூர் | 475 | 441 | 34 | 16,370 | 0.72 |
| 12 | கோயம்புத்தூர் | 384 | 360 | 34 | 9,646 | 0.91 |
| 13 | நீலகிரி | 97 | 92 | 5 | 2,498 | 0.25 |
| 14 | மதுரை | 872 | 827 | 45 | 17,987 | 0.61 |
| 15 | தேனி | 557 | 501 | 56 | 6,025 | 0.21 |
| 16 | திண்டுக்கல் | 222 | 193 | 29 | 6,012 | 0.29 |
| 17 | திருச்சி<br>பெரம்பலூர்<br>அரியலூர் | 370<br>197<br>104 | 333<br>192<br>97 | 37<br>5<br>7 | 21,724<br>20,493<br>14,901 | 2.71 |
| 18 | கரூர் | 170 | 155 | 15 | 5,769 | 0.46 |
| 19 | தஞ்சாவூர்<br>திருவாரூர் | 275<br>133 | 255<br>104 | 20<br>29 | 12,356<br>11,998 | 0.42 |
| 20 | புதுக்கோட்டை | 426 | 346 | 80 | 11,163 | 0.25 |
| 21 | சிவகங்கை &<br>மானாமதுரை<br>ராமநாதபுரம் | 470<br><br>154 | 378<br><br>128 | 92<br><br>30 | 8,627<br><br>3,015 | 0.25 |
| 22 | விருதுநகர் | 144 | 116 | 28 | 3,286 | 0.14 |
| 23 | திருநெல்வேலி | 233 | 214 | 19 | 7,012 | 0.32 |
| 24 | தூத்துக்குடி | 259 | 176 | 83 | 3,930 | 0.17 |
| 25 | கன்னியாகுமரி | 54 | 52 | 2 | 4,355 | 0.12 |
| | **மொத்தம்** | **10,611** | **9,425** | **1,086** | **4,25,369** | **16.89** |

## 3.3 தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்

பால் நுகர்வோரின் நலனைப் பாதுகாப்பதற்காக பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன. பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், இணையம் / மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து பால் பாக்கெட்டுகள் மற்றும் பால் பொருட்களை பெற்று நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றன. இந்த பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் இணையம் / மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் மொத்த விற்பனையாளர்களாக கருதப்பட்டுகின்றன.

மாநிலம் முழுவதும் 58 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 48 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் உள்ள பால் நுகர்வோர்களுக்கு நாளொன்றுக்கு சராசரியாக 3.70 இலட்சம் லிட்டர் பாலையும், ஒரு மாதத்திற்கு ரூ.40 இலட்சம்

மதிப்புள்ள பால் பொருட்களையும் விற்பனை செய்து வருகின்றன.

பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகமும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

## 4. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது 'ஆனந்த்' போன்ற மூன்றடுக்கு முறையில் இயங்கும் நடு அடுக்கு அளவிலான ஒரு கூட்டுறவு அமைப்பாகும். மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

தற்போது 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து கூட்டுறவு நிறுவனங்களையும் போலவே, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றன. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பொது மேலாளர், நிர்வாகத்தின் தலைமை செயல் அலுவலராக உள்ளார்.

## 4.1 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் செயல்பாடுகள்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பால் வழித்தடங்கள் அமைத்தும், பால் வழித்தட வாகனங்கள் மூலமாக தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து பாலை வாங்கி, அருகிலுள்ள மொத்த பால் குளிர்விப்பான், பால் குளிரூட்டும் நிலையங்கள், பால்பண்ணைகளுக்கு அனுப்புகின்றன. மேலும் பால் டேங்கர்கள் மூலமாக மொத்த பால் குளிர்விப்பான்களின் பாலினை பால் பண்ணைகள்

மற்றும் மாநகர பால்பண்ணைகளுக்கு ஒன்றியங்கள் அனுப்பி வருகின்றன. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட கால்நடைத் தீவனம், தாது உப்புக் கலவை மற்றும் காப்பீட்டுத் தொகை போன்ற உள்ளீட்டு செலவினங்களுக்கான தொகையை பிடித்தம் செய்தது போக, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட பாலின் தரத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பால் பணத் தொகையினை வழங்குகிறது.

பால் மற்றும் பால் பொருட்களின் தயாரிப்புக்கு போக உபரியாக உள்ள பாலை மாநகர பால்பண்ணைகளுக்கு பதப்படுத்தவும் விற்பனைக்காகவும் அனுப்பிவைக்கின்றன. தேவைப்படும் பட்சத்தில் பாலானது பால் பவுடராக உருமாற்றம் செய்ய, மதுரை, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி, மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் பால் பவுடர் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி

வெண்ணெயாகவும், பால் பவுடராகவும் உருமாற்றம் செய்யப்படுகின்றன.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதிலும், செயல்படுத்தும் முகமையாக செயல்படுவதிலும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், தங்களது ஊழியர்கள் மற்றும் பால் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தூய பால் உற்பத்தி மற்றும் செயற்கை முறை கருவூட்டல் போன்றவற்றில் பயிற்சியும் அளிக்கின்றன. மேலும், தாங்கள் ஈட்டிய இலாபத்தை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களுக்கு அவர்களால் வழங்கப்பட்ட பாலின் தரம் மற்றும் அளவிற்கு ஏற்ப ஊக்கத் தொகையாக பகிர்ந்தளிக்கின்றன.

## 4.2 பணிநிலைத் திறன்

25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உள்ள ஊழியர்களின் பணிநிலைத் திறன் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ. எண் | பதவியின் பெயர் | பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொதுமேலாளர் | 25 |
| 2 | துணை பொதுமேலாளர் | 23 |
| 3 | உதவி பொதுமேலாளர் | 85 |
| 4 | மேலாளர் | 386 |
| 5 | துணை மேலாளர் | 439 |
| 6 | விரிவாக்க அலுவலர் | 261 |
| 7 | அலுவலக ஊழியர் | 761 |
| 8 | ஓட்டுநர் | 283 |
| 9 | தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள் | 1,913 |
| | **மொத்தம்** | **4,176** |

## 5. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், 3 அடுக்கு "ஆனந்த் மாதிரி" வடிவத்தின் மாநில அளவிலான உயர்மட்ட உச்ச அமைப்பாகும். இதில், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் கூட்டுறவு சங்கமாக தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் பதிவு செய்யப்பட்டது. அப்போதைய தமிழ்நாடு பால்வள வாரியத்தினால் கையாளப்பட்ட பால் கொள்முதல், பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு வழங்குவதற்காக பதப்படுத்துதல், சிப்பங்கட்டுதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற அனைத்து வணிக நடவடிக்கைகளையும் உள்ளடக்கி 01.02.1981 அன்று தொடங்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணைய நிர்வாக அலுவலகம் மற்றும் இதர பிரிவு

அலுவலகங்கள் தற்போது சென்னை, நந்தனத்தில் 20.06.2018 முதல் செயல்பட்டு வருகின்றது.

இணையத்தின் ஒட்டு மொத்த நிர்வாகம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களிலிருந்து மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணைய நிர்வாகக்குழு தேர்தல், நீதிமன்ற வழக்கு காரணமாக திட்டமிட்டபடி நடத்த இயலவில்லை. மேலும், நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் இணையத்திற்கு தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5.1 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் செயல்பாடுகள்

இணையமானது, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலை பதப்படுத்தி பால் பைகளில் நிரப்பப்பட்டு சென்னை பெருநகரம் மற்றும் அதன் புறநகரப் பகுதிகளில் உள்ள நுகர்வோர்களுக்கு பால் மற்றும் பால் பொருட்களாக விற்பனை செய்து வருகிறது. இது தவிர, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் தயாரிக்கப்படும் நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம் உள்ளிட்ட பால் பொருட்களை மாநிலத்திற்கு உள்ளேயும், வெளியேயும் 'ஆவின்' என்ற வணிக பெயரில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்வதில் இணையம் முக்கிய பங்கு வகிக்கிறது.

இணையமானது, ஒன்றியங்களின் பால் கொள்முதல், பால் கையாளுதல், சந்தைப்படுத்தல், உட்கட்டமைப்பு உருவாக்கம், தரக் கட்டுப்பாடு மற்றும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல்

போன்ற நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கி கண்காணிக்கின்றது.

சென்னை பெருநகர நுகர்வோர்களுக்கு தேவையான பாலை பதப்படுத்தவும், சிப்பங்கட்டவும், விநியோகிக்கவும் சென்னை பெருநகரத்தில், மாதவரம் பால் பண்ணை, அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் மூன்று பால் பண்ணைகள் இணையத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இந்த பால் பண்ணைகள் தவிர, அம்பத்தூரில் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும், திருவண்ணாமலையில் பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, உதகமண்டலத்தில் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை, ஈரோட்டில் எருமை உறை விந்து நிலையம் மற்றும் பால் கறவையின மேம்பாட்டு திட்ட அலுவலகம் ஆகியவையும் இணையத்தின் சொந்த அலகுகளாக செயல்பட்டு வருகின்றன.

இணையம் தனது சொந்த பயன்பாட்டிற்கென போக்குவரத்து பிரிவைக் கொண்டுள்ளது. இதில்

பல்வேறு கொள்ளளவு கொண்ட நவீன மயமாக்கப்பட்ட சாலைவழி பால் டேங்கர்கள் பராமரிக்கப்படுகின்றன. இணையம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து தினசரி பால் சேகரிப்பதற்காக வாடகை வாகனங்களையும் இயக்குகிறது. ஜி.பி.எஸ். பொருத்தப்பட்டிருப்பதால் அனைத்து வாகனங்களின் இயக்கமும் கண்காணிக்கப்படுகிறது.

பொது மக்களுக்கு, பால் மற்றும் பால் பொருட்களை எடுத்துச் செல்ல ஏதுவாக, இணையம் தனது சொந்த பாலி யுரேதேன் நுரை (PUF) காப்பிடப்பட்ட கொள்கலன் வாகனங்கள் மற்றும் குளிரூட்டப்பட்ட PUF காப்பிடப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துகிறது.

## 5.2 பணிநிலைத் திறன்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பணிநிலைத்திறன் கீழ்கண்டவாறு உள்ளது.

## தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாகம் மற்றும் பணிநிலைத் திறன் பட்டியல்

| வ. எண் | பதவியின் பெயர் | பணி நிலைத் திறன் |
|---|---|---|
| 1 | மேலாண்மை இயக்குநர் | 1 |
| 2 | இணை மேலாண்மை இயக்குநர் | 1 |
| 3 | தலைமை விழிப்புபணி அலுவலர் | 1 |
| 4 | பொது மேலாளர் | 10 |
| 5 | துணை பொது மேலாளர் | 24 |
| 6 | உதவி பொது மேலாளர் | 65 |
| 7 | மேலாளர் | 108 |
| 8 | துணை மேலாளர் | 168 |
| 9 | தனிச் செயலர் நிலை 1, 2 & 3 | 24 |
| 10 | செயல்அலுவலர் | 170 |
| 11 | இளநிலை செயல் அலுவலர் (அலுவலகம்)/தட்டச்சு | 155 |
| 12 | ஓட்டுநர் | 240 |
| 13 | தொழில்நுட்ப பணியாளர் மற்றும் முதுநிலை தொழிற்சாலை உதவியாளர் | 1,122 |
| மொத்தம் | | 2,089 |

## 5.3 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் நடத்தப்படும் பால்பண்ணைகள்

### 5.3.1 மாதவரம் பால் பண்ணை

1962 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணையாக நியூசிலாந்து அரசாங்க நிதி உதவியுடன் நிறுவப்பட்ட மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் அமைந்துள்ள ஆவின் பால் பண்ணை ஆவின் குடும்பத்தில் முதன்முதலில் நிறுவப்பட்ட பழமையான பால் பண்ணையாகும். கடந்த 58 ஆண்டுகளில் படிப்படியாக பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறனுடையதாக செயல்பாட்டில் உள்ளது. வடசென்னை மக்களுக்கு தரமான பால் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக சமீபத்திய ஆண்டுகளில் சிப்பங்கட்டுதல் மற்றும் குளிர்பதன வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மாதவரம் பால் பண்ணையில் 53 வாடகை பால்வழித்தட வாகனங்கள், 33 தனியார் முகவர் வாகனங்கள் மற்றும் 3 இணைய பால் வழித்தட வாகனங்கள் மூலமாக விநியோகிக்கப்படுகிறது.

மாதவரம் பால் பண்ணைக்கு, IS/ISO 9001: 2015, IS 15000: 2013 (HACCP) மற்றும் IS/ISO 14001: 2015 (EMS), ISO 22000–2005 (FSSC 22000) சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் திட்டமான, பால் பதப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (DIDF) ரூ.113.75 கோடி மூலம் மாதவரம் பால் பண்ணையின் கையாளும் திறனை நாளொன்றுக்கு 10.00 இலட்சம் லிட்டராக அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை நாளொன்றுக்கு 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு திறனுக்கு விரிவாக்கம் செய்ய இயலும்.

### 5.3.2 அம்பத்தூர் பால் பண்ணை

அம்பத்தூர் பால் பண்ணை 1976 ஆம் ஆண்டில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நிறுவப்பட்டது. மொத்த பால் விற்பனையை டேங்கர்கள் மூலம் அனுப்புவதற்கான ஏற்பாடுகளுடன் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணை, தேசிய பால் வள வாரியம் மூலம் நிறுவப்பட்டது. இந்த பால்பண்ணை பின்னர் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட பால் பண்ணையாக 1986ல் விரிவுபடுத்தப்பட்டது. இப்பால்பண்ணை, தானியங்கி இயந்திர தூய்மை செய்யும் அமைப்பு (CIP) மற்றும் சூரிய சக்தி மூலம் கொதிகலன் நீரை கொதிக்க வைக்கும் அமைப்பு ஆகியன நிறுவபட்டுள்ளன. கழிவு நீர் சுத்திகரிப் திறன் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டரிலிருந்து 7 இலட்சம் லிட்டராக விரிவாக்கப்பட்டுள்ளது. அம்பத்தூர் பால் பண்ணை நுழைவாயிலில் 20.06.2018 முதல் ஒரு அதிநவீன ஆவின் பாலகம் செயல்பட்டு வருகிறது.

அம்பத்தூர் பால் பண்ணை, மத்திய சென்னை நுகர்வோருக்கு 45 வாடகை வழித்தட வாகனங்கள், 26 தனியார் முகவர் வாகனங்கள், 5 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்க பால் வழித்தடங்கள் மற்றும் 14 இணையம் மற்றும் தனியார் முகவர் வாகனங்கள் பால் வழித்தடங்கள் மூலம் பால் வழங்குகிறது. இந்த பால் பண்ணைக்கு IS/ISO 9001: 2015, IS 15000: 2013 (HACCP) மற்றும் IS/ISO 14001: 2015 (EMS), ஆகிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பண்ணையின் கையாளும் திறனை 4 இலட்சம் லிட்டரிலிருந்து 8 இலட்சம் லிட்டராக உயர்த்தும் பொருட்டு ரூ.31.18 கோடி மதிப்பில் தேசிய விவசாய மற்றும் கிராமபுற வளர்ச்சி வங்கி – பால் பதப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு (DIDF) கடன் நிதியிலிருந்து விரிவாக்கம் செய்யப்படும்.

### 5.3.3 சோழிங்கநல்லூர் பால்பண்ணை

தென்னிந்தியாவின் முதன் முதலாக, நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறனுடைய தானியங்கி பால் பண்ணை சோழிங்க நல்லூரில் (IIIவது பால்பண்ணை) 1996ல் தேசிய பால்வள வாரியத்தால் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் 3.5 இலட்சம் லிட்டர் வரை பால் டேங்கர்களில் மொத்த பால் விற்பனை மையங்களுக்காக அனுப்புவதற்காகவும், 50,000 லிட்டர் பாக்கெட் பாலாக விற்பனைக்கு அனுப்புவதற்காகவும் வடிவமைக்கப்பட்டது. பின்னர், கையாளும் திறனை நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டரிலிருந்து 7.5 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்ய DIDF நிதியின் கீழ் ரூ.25.80 கோடி மதிப்பீட்டிற்கு நிதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சோழிங்கநல்லூர் பால்பண்ணை மூலமாக தென் சென்னை நுகர்வோருக்கு, 49 வாடகை பால் வழித்தட வாகனங்கள், 65 தனியார் வாகனங்கள், 4

பால் நுகர்வோர் கூட்டுறவு சங்க பால் வழித்தடங்கள் மற்றும் 7 இணைய பால் வழித்தடங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் 2018 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட UASB டைஜெஸ்டருடன் ஒரு புதிய கழிவுப்பொருள் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்பட்டது. மேலும், சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் ரூ.100 இலட்சம் செலவில் நாளொன்றுக்கு 1,000–1,100 கிலோ நீராவியை உற்பத்தி செய்யும் செறிவூட்டப்பட்ட சூரிய வெப்ப அமைப்பு நிறுவப்பட்டதைத் தொடர்ந்து இந்த பால் பண்ணையின் உலை எண்ணெய் பயன்பாட்டில் நாளொன்றுக்கு 100 முதல் 110 லிட்டர் வரை சேமிப்பு ஏற்படுவதால் ஆண்டுக்கு ரூ.12 இலட்சம் நிதி செலவினம் மிச்சப்படுகிறது. பால் பண்ணையின் நுழைவாயிலில் ஒரு அதிநவீன பாலகம் 20.06.2018 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த பால்பண்ணை IS/ISO 9001:2015, IS

15000:2013 (HACCP) and IS/ISO 14001:2015 (EMS) ஆகிய சான்றிதழ்களுடன் செயல்பட்டு வருகிறது.

### 5.3.4 திருவண்ணாமலை பால் பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை (DCPP)

2012–13–ம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில், 'திருவண்ணாமலை மாவட்டத்தில் இணைய பால் பண்ணை பிரிவு ஒன்று நிறுவப்படும்' என அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், 'நபார்டு' நிதி உதவியுடன் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளக்கூடிய திறன் கொண்ட பால் பண்ணை மற்றும் நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் திறன் கொண்ட தொழிற்சாலை ஆகியன ரூ.72.60 கோடி செலவில் திருவண்ணாமலை மாவட்டம் அம்மாபாளையம் கிராமத்தில் 2014ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மேலும், திருவண்ணாமலை பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலையின் அன்றாட பயன்பாட்டிற்கான நீர் தேவையை எதிர்கொள்ள சாத்தனூர் அணையில் இருந்து நாளொன்றுக்கு

5.50 இலட்சம் லிட்டர் தண்ணீரை வழங்குவதற்கான நீர் வழங்கல் திட்டம், தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டது.

மாவட்ட கூட் றவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் உபரிப் பாலை வெண்ணெய் மற்றும் பால் பவுடராக மாற்றுவதே இதன் முக்கிய நோக்கம் ஆகும்.

இந்த ஆலை 500 மெட்ரிக் டன் வெண்ணை மற்றும் 1,500 மெட்ரிக் டன் பால் பவுடரை சேமிக்கும் திறன் கொண்டது. மேலும், ஒரு நாளைக்கு 3 மெட்ரிக் டன் நெய்யை சில்லறை விற்பனைக்கான சிப்பங்கட்டும் உற்பத்தி வசதியையும் இந்த பால் பவுடர் தொழிற்சாலை கொண்டுள்ளது.

இந்த பால் பவுடர் தொழிற்சாலைக்கு ஐஎஸ்ஓ 22000 : 2005 (FSMS) சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் DIDF திட்டத்தின் கீழ் ரூ.40.90 கோடி மதிப்பீட்டில், 5

மெட்ரிக் டன் திறன் கொண்ட தானியங்கி 10 கிராம் மற்றும் 20 கிராம் சிப்பங்களாக வெண்ணைய் உற்பத்தி செய்யும் அலகு மற்றும் நொதியூட்டப்பட்ட பால் பொருட்களான தயிர், மோர் மற்றும் லஸ்ஸி தயாரிக்கும் அலகு நிறுவ நிதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

### 5.3.5 அம்பத்தூர் பால் பொருட்கள் தொழிற்சாலை

இணையத்தின் ஒரு தனி பிரிவாக, 1976 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பால் பொருட்கள் தயாரிப்பு பிரிவு சென்னை அயனாவரத்தில் நிறுவப்பட்டது. பின்னர், ஆலை 2003 ஆம் ஆண்டில் அம்பத்தூர் பால்பண்ணை வளாகத்தில் அமைந்த விசாலமான கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

பால்கோவா, மைசூர்பா மற்றும் பால் பேடா போன்ற பால் தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்காக இந்த பால் பொருட்கள் தயாரிப்பு ஆலை நிறுவப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு 15,000 லிட்டர் ஐஸ்கிரீம்களை உற்பத்தி

செய்யும் நோக்கில் இந்த ஆலை விரிவாக்கப்பட்டது. நொதியூட்டப்பட்ட பால் பொருட்களான லஸ்ஸி, பனீர், மோர், தயிர் மற்றும் புரோபயாடிக் தயிர் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் நோக்கில் வசதிகள் உருவாக்கப்பட்டன. இனிப்பு கோவா, பால் பேடா, குலாப்ஜாமுன், ரசகுல்லா, மைசூர்பா, தயிர், பிரீமியம் தயிர், லஸ்ஸி, பன்னீர், புரோபயாடிக் தயிர், புரோபயாடிக் லஸ்ஸி மற்றும் சாக்லேட் ஆகிய பால் உப பொருட்கள் இந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், ஐஸ்கிரீம் வகைகளான கிரேப் டூயட், மாங்கோ டூயட், கோன், ஸ்ட்ராபெரி கூம்பு, டூ இன் ஒன் பார் ஐஸ்கிரீம்கள் மற்றும் குல்பி ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. பெருநகர நுகர்வோரின் பால் பொருட்கள் தேவைகளையும் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் பொருட்கள் தேவைகளையும் இந்த ஆலை பூர்த்தி செய்கிறது.

இந்த பால் பொருட்கள் தொழிற்சாலைக்கு தீங்கு பகுப்பாய்வு மற்றும் முக்கிய கட்டுப்பாட்டு குறியெண் (HACCP) உடன் ஒருங்கிணைந்த தர

மேலாண்மை அமைப்பு மூலம் தயாரிப்புகள் குறித்த சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது. IS / ISO 9001: 2015 & IS 15000: 1998, FSSAI (இந்தியாவின் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம்) பெறப்பட்டுள்ளது. மேலும் FSSC 22000 தர சான்றிதழ் பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது, அம்பத்தூர் பால் பொருட்கள் உற்பத்தி பிரிவில் 146 வகைகளில் 82 எண்ணிக்கையிலான பால் பொருட்கள் தயாரிக்கப்பட்டு, 36 ஒப்பந்த வாகனங்கள் மற்றும் 5 குளிரூட்டப்பட்ட வாகனங்கள் மூலம் சில்லறை விற்பனைக்கு விநியோகிக்கப்படுகின்றன. ஐஸ்கிரீம் மற்றும் சில பால் பொருட்கள், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் 3 குளிரூட்டப்பட்ட வாகனங்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவுடன் இனிப்புகள் தயாரிக்கப்பட புதிய மாற்றியமைக்கப்பட்ட சிப்பமிடும் அமைப்பு மற்றும் பனீர் தயாரிப்பு கான இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

தற்போது, தீவிர சந்தைப்படுத்தல் முயற்சிகளின் விளைவாக ஐஸ்கிரீம் விற்பனை நாளொன்றுக்கு 6,000 லிட்டரில் இருந்து 10,000 லிட்டர் என்ற விற்பனை இலக்கை அடைந்துள்ளது.

**ஆவின் பால் பொருட்களின் வகைகள்**

| இனிப்புகள் | ஐஸ்கிரீம் வகைகள் | நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் | கூழ்மப் பொருட்கள் மற்றும் பிற |
|---|---|---|---|
| • இனிப்பு கோவா<br>• பேரிச்சை கோவா<br>• மைசூர்பா<br>• நீண்டநாள் கெடா குலோப்ஜாமுன்<br>• பால்பேடா<br>• ரசகுல்லா | • கப் ஐஸ்கிரீம்<br>• ஐஸ்கிரீம் பேமலி சிப்பம்<br>• பந்து ஐஸ்கிரீம்<br>• சாக்கோ பார்<br>• மாங்கோ டீரீட்<br>• பைனாப்பிள் டீரீட்<br>• திராட்சை டீரீட்<br>• 2 இன் 1 பார்<br>• ஸ்ட்ராபெர்ரி கோர்<br>• மாங்கோ கோர்<br>• சாக்கோ பீஸ்ட்<br>• சாக்லேட் பீஸ்ட்<br>• பிரிமியம் வகை கப் ஐஸ்கிரீம்<br>• பிரிமியம் வகை ஸ்கூப் ஐஸ்கிரீம் (6 வகைகள்)<br>• சாக்லேட் கோன்<br>• வெனிலா கோன்<br>• குல்ஃபி பார்<br>• கசட்டா<br>• சுவையூட்டப்பட்ட குல்ஃபி பார் (10 சுவைகள்)<br>• இனிப்பில்லாத குல்ஃபி பார்<br>• லாங் குல்ஃபி பார் | • சுவையூட்டப்பட்ட யோகர்ட் (5 சுவைகள்)<br>• இனிப்பில்லாத யோகர்ட்<br>• தயிர்<br>• லஸ்சி<br>• பாக்கெட் மோர்<br>• பிரிமியம் தயிர்கப்புகள்<br>• பாட்டில்களில் அடைக்கப்பட்ட மோர்<br>• புரோபயாட்டிக் தயிர்<br>• புரோபயாட்டிக் லஸ்சி | பனீர்<br>**பிற பொருட்கள்**<br>• இனிப்பு இல்லா கோவா<br>• பால் சாக்லேட்<br>• நட்டி சாக்லேட்<br>• குக்கீஸ் (6 வகைகள்) |

## 5.4 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் நடத்தப்படும் சேவை நிறுவனங்கள்

### 5.4.1 கால்நடை தீவன ஆலை – ஈரோடு

கால்நடை தீவனமானது, வளரும் இளங்கன்றுகள், கறவை மாடுகள் மற்றும் சினை மாடுகளுக்கான அத்தியாவசிய ஊட்டத்தை வழங்கும் சிறந்த ஆதாரமாகும். பால் கறவை மாடுகளின் வளர்ச்சி, அபிவிருத்தி, இனப்பெருக்கம் மற்றும் உற்பத்தித்திறனில் கால்நடை தீவனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

1982 ஆம் ஆண்டில் ஈரோட்டில் 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட கால்நடை தீவன ஆலை நிறுவப்பட்டது. பின்னர், ரூ.20.36 கோடி செலவில் நாளொன்றுக்கு 150 மெட்ரிக் டன் திறன் கொண்டதாக விரிவாக்கப்பட்டது. ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் உற்பத்தி செய்யப்படும் கால்நடை

தீவனத்திற்கு பால் உற்பத்தியாளர்களிடையே அதிக வரவேற்பு உள்ளது.

2020-2021 ஆம் ஆண்டில் ஈரோடு கால்நடை தீவன ஆலையில் கால்நடை தீவன உற்பத்தி 38,193 மெட்ரிக் டன்னாக உள்ளது. ஈரோடு கால்நடை தீவனத்திற்கான தேவை கள அளவில் அதிகரித்து கொண்டு வருவதால் உற்பத்தி திறனை நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் என்ற அளவுக்கு உயர்த்த பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில், கால்நடை தீவன விற்பனை 20 மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது 2010-2011 ஆம் ஆண்டில் 4,612 மெட்ரிக் டன் ஆக இருந்த கால்நடை தீவன விற்பனை 2020-21 ஆம் ஆண்டில் 1,08,485 மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. புதியதாக நாளொன்றுக்கு 50 மெட்ரிக் டன் திறன் கொண்ட புதிய கால்நடை தீவன ஆலை விருதுநகரில் விரைவில் நிறுவப்படும்.

கடந்த 11 ஆண்டுகளில் கால்நடை தீவன விற்பனையின் விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**கால்நடை தீவனம் விற்பனை விவரங்கள்**
**(மெட்ரிக் டன்னில்)**

| வருடம் | விற்பனை அளவு |
|---|---|
| 2010 –2011 | 4,612 |
| 2011 –2012 | 15,046 |
| 2012 –2013 | 31,093 |
| 2013 –2014 | 53,292 |
| 2014 –2015 | 51,702 |
| 2015 –2016 | 58,652 |
| 2016 –2017 | 60,770 |
| 2017 –2018 | 81,531 |
| 2018 –2019 | 91,691 |
| 2019 –2020 | 95,153 |
| 2020 –2021 | 1,08,485 |
| 2021–2022 (15.08.2021 வரை) | 36,835 |

### 5.4.2 தாது உப்புக் கலவை ஆலை

கறவை மாடுகளில் பால் உற்பத்தி, இனப்பெருக்க திறன் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவற்றை அதிகரிக்க தாது உப்புக் கலவை முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் தாது உப்புக் கலவை இத்துறையின் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமல்லாது கால்நடை பராமரிப்பு துறைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் தாது உப்புக் கலவை விற்பனையின் விவரங்கள் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

## தாது உப்புக் கலவை விற்பனை விவரங்கள் (மெட்ரிக் டன்னில்)

| வருடம் | விற்பனை அளவு |
|---|---|
| 2011 –2012 | 172 |
| 2012 –2013 | 131 |
| 2013 –2014 | 391 |
| 2014 –2015 | 244 |
| 2015 –2016 | 966 |
| 2016 –2017 | 1,315 |
| 2017 –2018 | 1,844 |
| 2018 –2019 | 2,872 |
| 2019 –2020 | 3,789 |
| 2020 –2021 | 3,427 |
| 2021 –2022 (15.08.2021 வரை) | 362 |

தற்போது, புதியதாக கிருஷ்ணகிரியில் நாளொன்றுக்கு 12 மெட்ரிக் டன் தாது உப்புக்

கலவை ஆலை நிறுவி இயக்க பணிகள் நடந்து வருகின்றன.

தாது உப்புக் கலவையின் விற்பனையை 2021-2022 ஆம் ஆண்டில் 4,000 மெட்ரிக் டன் அளவுக்கு அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.4.3 கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப்பண்ணை, உதகமண்டலம்

கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை 1973 இல் நிறுவப்பட்டது. செயற்கைமுறை கருவூட்டலுக்கான உறை விந்து குச்சிகள் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணையில் தயாரிக்கப்படுகின்றது. பொலிகாளை பண்ணை, வனத்துறையிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட 37.725 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகின்றது. இங்கு தயாரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகள் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கும் வழங்கப்படுவதற்காக ஈரோடு

எருமையின உறை விந்து நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

**பொலிகாளை பண்ணை**

உறைவிந்து உற்பத்திக்காக தூய ஜெர்சி, கலப்பின ஜெர்சி, தூய ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் மற்றும் கலப்பின ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் இன காளைகள் பொலிகாளை பண்ணையில் பராமரிக்கப்படுகின்றன.

தற்போது, பொலிகாளை பண்ணையில் சுமார் 65 காளைகள் உள்ளன, அவற்றில் 37 காளைகள் உறை விந்து சேகரிப்பின் கீழ் உள்ளன. இப் பொலிகாளை பண்ணையில் தற்போது 4 இறக்குமதி செய்யப்பட்ட தூய ஜெர்சி பொலிகாளைகள் உள்ளன. இப்பண்ணையில் 2020–2021 ம் ஆண்டில், 7.00 இலட்சம் உறை விந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டது. 2021–2022ம் ஆண்டில் சுமார் 12.00 இலட்சம் அளவு உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கருவூல பண்ணை மற்றும் பொலிகாளைப் பண்ணை ஒரு ஐஎஸ்ஓ 9001 – 2015 சான்றளிக்கப்பட்ட மற்றும் 'B'–தரச்சான்று பெற்ற உறைவிந்து நிலையம் ஆகும்.

### 5.4.4 எருமையின உறைவிந்து நிலையம் (BFSS), ஈரோடு

எருமையின உறைவிந்து நிலையம் நவம்பர் 1983ல் ஈரோட்டில் நிறுவப்பட்டது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அவற்றின் தேவைகளின் அடிப்படையில் உறைவிந்து குச்சிகள் விநியோகித்தல் மற்றும் இனப்பெருக்கம் செய்ய பொலிகாளை கன்றுகளை வளர்ப்பது ஆகிய பணிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. தவிர, கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட எருமையின உறை விந்து குச்சிகளையும் இந்த நிலையத்தின் மூலம் மாவட்ட ஒன்றியங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

இந்த அலகு, ஒவ்வொரு மாதமும் சுமார் 1.50 இலட்சம் பசுவின மற்றும் 6,000 எண்ணிக்கையிலான எருமையின உறைவிந்து குச்சிகளை விநியோகிக்கிறது.

இந்த பிரிவின் கீழ் ஆத்தூரில் பொலிகாளை கன்றுகள் முன்தனிமைப்படுத்துதல் நிலையம், ஈரோட்டில் பொலிகாளை கன்றுகள் தனிமைப்படுத்துதல் நிலையம் மற்றும் புதுக்குடியில் கன்று வளர்ப்பு நிலையம் மற்றும் பசுந்தீவன பண்ணை ஆகியன செயல்பட்டு வருகின்றன. பொலிகாளைக் கன்றுகள் உறைவிந்து நிலையங்களுக்கு கொண்டு செல்லும் முன்னதாக புதுக்குடி கன்று வளர்ப்பு நிலையத்தில் பராமரிக்கப்படுகிறது.

### 5.4.5 பால் கறவையின மேம்பாட்டு திட்ட செயல்பாடுகள் (DIPA), ஈரோடு

இந்த அலகு கலப்பின ஜெர்சி இனத்தின் களவெளி செயல்திறன் பதிவு திட்டத்தை (FPRP) இந்திய அரசின் நிதி உதவியுடன் காளை இனப்பெருக்கத்திற்கான தேசிய திட்டத்தின்

(NPBB) கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை (TNLDA) மூலம் செயல்படுத்துகிறது.

களவெளி செயல்திறன் பதிவு திட்டமானது சேலம், நாமக்கல், கரூர், தர்மபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய 9 மாவட்ட ஒன்றியங்களில் இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

களவெளி செயல்திறன் பதிவு திட்டமானது (FPRP), பாரம்பரியம் நிரூபிக்கப்பட்ட காளையின் விந்தை பயன்படுத்தி தொடர்ச்சியான பால் உற்பத்தி அளவு பதிவின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த பசுக்களுக்கு, சிறப்பு கருவூட்டல் செய்து அதன் மூலம் சிறந்த மரபியல் திறனுள்ள பொலிகாளை கலப்பின கன்றுகள் உற்பத்தி செய்யும் திட்டமாகும்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட 429 பொலிகாளைக் கன்றுகள், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்

ஆகியவற்றின் உறைவிந்து நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 6. கால்நடை வளங்கள்

தமிழ்நாட்டில் சுமார் 16.89 இலட்சம் கால்நடைகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ளன. அவற்றில் 16.45 இலட்சம் பசுக்களும், 0.44 இலட்சம் எருமைகளும் உள்ளன. இனப்பெருக்கத்திற்கு தகுதி வாய்ந்தவை 10.20 இலட்சம் பசுக்கள் மற்றும் 0.22 இலட்சம் எருமைகள் ஆகும்.

தமிழகம் வெப்பமண்டல பகுதியில் அமைந்துள்ளதால், கலப்பின ஜெர்சி இன பசுக்களே இந்த தட்பவெப்ப நிலையை ஏற்றுக் கொள்ள கூடியவையாக உள்ளன.

கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கரூர் மற்றும் நீலகிரி போன்ற மாவட்டங்களில் ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் இனமும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இனவாரியான உறைவிந்து குச்சிகளுக்கான தேவையை, நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின், கருவூல ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை பூர்த்தி செய்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் கீழ் உள்ள ஒன்றியங்கள் மூலம் 2020–21 ஆம் ஆண்டில் 17.45 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. 5.82 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன. கிராம அளவில் உள்ள பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் 2,613 பயிற்சி பெற்ற கிராம நிலை ஊழியர்கள் மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படுகிறது.

7. பால் கொள்முதல்

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், தங்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் பாலை தனித்தனியே பரிசோதனை செய்து உள்ளூர் தேவைக்கு சிறு அளவு பாலை விற்பனை செய்தது போக எஞ்சிய பாலை 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட துருவுறா பால் கேன்கள் மூலம் அருகிலுள்ள தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களுக்கோ அல்லது பால் குளிரூட்டும் நிலையம் அல்லது பால் பண்ணைகளுக்கோ அனுப்பி வைக்கின்றன. இதன் பொருட்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் போக்குவரத்து வசதிகள் செய்து தருகின்றன. தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களில் அல்லது பால் குளிரூட்டும் நிலையத்தில் இப்பால் குளிரூட்டப்படுகிறது. பின் ஒன்றிய பால் பண்ணைகளுக்கோ அல்லது சென்னை பெருநகர பால் பண்ணைகளுக்கோ அல்லது பால் பவுடர் தொழிற்சாலைக்கோ, பதப்படுத்துவது மற்றும்

உருமாற்றம் தொடர்பான தொடர் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

2010–2011 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 20.67 இலட்சம் லிட்டராக இருந்த மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் சராசரி கொள்முதல் 2021–2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று வரை 38.23 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. இது கடந்த பதினொறு ஆண்டுகளில் 85 சதவீத வளர்ச்சியாகும். 2020–2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2021–2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 வரை நாளொன்றுக்கு சராசரி பால் கொள்முதல் அளவு 2,33,000 லிட்டர் அதிகரித்துள்ளது. 2010–2011 முதல் 2020–2021 வரை சராசரி பால் கொள்முதல் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

## மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் சராசரி பால் கொள்முதல்

| வ. எண் | வருடம் | நாளொன்றுக்கு சராசரி பால் கொள்முதல் (இலட்சம் லிட்டரில்) |
|---|---|---|
| 1 | 2010–2011 | 20.67 |
| 2 | 2011–2012 | 21.40 |
| 3 | 2012–2013 | 24.36 |
| 4 | 2013–2014 | 23.22 |
| 5 | 2014–2015 | 23.68 |
| 6 | 2015–2016 | 28.97 |
| 7 | 2016–2017 | 28.50 |
| 8 | 2017–2018 | 29.46 |
| 9 | 2018–2019 | 33.23 |
| 10 | 2019–2020 | 32.96 |
| 11 | 2020 –2021 | 35.90 |
| 12 | 2021 – 2022 (ஆகஸ்ட் 15 வரை) | 38.23 |

## மாவட்ட ஒன்றியம் வாரியாக பால் கொள்முதல்
## (நாளொன்றுக்கு சராசரி லிட்டர்)

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 (ஆகஸ்ட் 15 வரை) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் - திருவள்ளூர் | 97,812 | 1,11,775 | 1,26,937 | 1,32,700 | 1,29,887 | 1,41,629 |
| 2 | விழுப்புரம் | 2,09,878 | 2,16,913 | 2,48,527 | 2,01,135 | 2,10,296 | 2,03,472 |
| 3 | கடலூர் | | | | 36,045 | 42,893 | 4,8,144 |
| 4 | வேலூர் | 3,05089 | 3,21,662 | 3,82,780 | 1,42,132 | 1,42,471 | 1,45,804 |
| 5 | திருவண்ணாமலை | | | | 2,49,519 | 2,63,704 | 2,95,738 |
| 6 | தர்மபுரி | 1,78,698 | 1,90.177 | 2,29,381 | 1,29,796 | 1,33,406 | 1,42,288 |
| 7 | கிருஷ்ணகிரி | | | | 94,320 | 97,710 | 93,341 |
| 8 | சேலம் | 4,97,708 | 5,29,493 | 4,59,039 | 4,63,771 | 5,21,216 | 5,43,815 |
| 9 | நாமக்கல் | | | 1,59,521 | 1,50,996 | 1,52,126 | 1,55,214 |
| 10 | ஈரோடு | 2,99,428 | 2,91,956 | 2,03,084 | 2,02,922 | 2,19,189 | 2,34,847 |
| 11 | திருப்பூர் | - | - | 2,24,127 | 2,25,562 | 2,29,812 | 2,41,297 |

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 (ஆகஸ்ட் 15 வரை) |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | கோயம்புத்தூர் | 2,62.369 | 2,44,319 | 1,61,029 | 1,48,149 | 1,66,963 | 1,84,635 |
| 13 | நீலகிரி | 14,223 | 12,861 | 12,430 | 12,962 | 12,287 | 11,215 |
| 14 | மதுரை | 2,59,329 | 2,76,340 | 2,87,159 | 1,68,187 | 2,08,316 | 2,33,045 |
| 15 | தேனி | | | | 1,09,991 | 1,18,068 | 1,12,879 |
| 16 | திண்டுக்கல் | 63,575 | 59,693 | 69,902 | 69,938 | 79,565 | 86,063 |
| 17 | திருச்சி | 4,11,508 | 4,34,652 | 5,07,556 | 4,41,542 | 4,85,162 | 5,28,108 |
| 18 | கரூர் | | | | 64,616 | 74,925 | 81,612 |
| 19 | தஞ்சாவூர் | 52,466 | 56,868 | 47,334 | 51,265 | 71,475 | 91,903 |
| 20 | புதுக்கோட்டை | 42,810 | 48,639 | 56,708 | 55,866 | 64,439 | 69,337 |
| 21 | சிவகங்கை | 61,435 | 57,513 | 58,929 | 54,585 | 63,030 | 71,080 |
| 22 | விருதுநகர் | 16,663 | 17,547 | 16,190 | 15,108 | 18,996 | 17,962 |
| 23 | திருநெல்வேலி | 69,193 | 69,456 | 66,173 | 37,084 | 44,491 | 50,837 |
| 24 | தூத்துக்குடி | | | | 30,240 | 32,776 | 33,493 |
| 25 | கன்னியாகுமரி | 7,570 | 5,738 | 5,984 | 7,409 | 6,636 | 6,135 |
| | **மொத்தம்** | **28,49,754** | **29,45,602** | **33,22,790** | **32,95,839** | **35,89,840** | **38,23,892** |

**ஒன்றியம் வாரியாக பால் கையாளும் திறன்**
**(நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்)**

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன் | | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குளிர்விப்பு மையம் | | மொத்த பால் குளிர்விப்பு மையம் | | |
| | | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | மொத்தம் |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 1 | 1,00,000 | 2 | 60,000 | 25 | 55,000 | 1,15,000 |
| 2 | விழுப்புரம் | 1 | 1,00,000 | 1 | 1,00,000 | 33 | 77,000 | 1,77.000 |
| 3 | கடலூர் | 0 | 0 | 1 | 10,000 | 10 | 44,000 | 54,000 |
| 4 | வேலூர் | 1 | 1,50,000 | 2 | 80,000 | 34 | 1,19,500 | 1,99,500 |
| 5 | திருவண்ணா – மலை | 0 | 0 | 2 | 1,50,000 | 75 | 2,28,500 | 3,78,500 |
| 6 | கிருஷ்ணகிரி | 0 | 0 | 1 | 50,000 | 5 | 21,000 | 71,000 |
| 7 | தர்மபுரி | 1 | 2,00,000 | 1 | 10,000 | 20 | 78,000 | 88,000 |
| 8 | சேலம் | 1 | 5,00,000 | 1 | 1,30,000 | 75 | 2,72,500 | 4,02,500 |
| 9 | நாமக்கல் | 0 | 0 | 2 | 1,00,000 | 22 | 53,000 | 1,53,000 |
| 10 | ஈரோடு | 1 | 3,00,000 | 2 | 35,000 | 52 | 2,44,000 | 2,79,000 |
| 11 | கோயம்புத்தூர் | 1 | 5,00,000 | 3 | 1,20,000 | 17 | 82,000 | 2,02,000 |
| 12 | திருப்பூர் | 0 | 0 | 2 | 1,10,000 | 39 | 1,90,000 | 3,00,000 |
| 13 | நீலகிரி | 1 | 50,000 | 1 | 10,000 | 6 | 11,000 | 21,000 |
| 14 | மதுரை | 1 | 5,00,000 | 0 | 0 | 60 | 1,18,000 | 1,18,000 |
| 15 | தேனி | 0 | 0 | 1 | 1,00,000 | 2 | 7,000 | 1,07,000 |

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன் | | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குளிர்விப்பு மையம் | | மொத்த பால் குளிர்விப்பு மையம் | | |
| | | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | மொத்தம் |
| 16 | திண்டுக்கல் | 1 | 30,000 | 2 | 40,000 | 21 | 70,000 | 1,10,000 |
| 17 | திருச்சி | 1 | 1,50,000 | 2 | 1,50,000 | 43 | 1,93,000 | 3,43,000 |
| | பாடலூர் | 1 | 1,00,000 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 18 | கரூர் | 0 | 0 | 1 | 50,000 | 11 | 24,500 | 74,500 |
| 19 | தஞ்சாவூர் | 1 | 48,000 | 1 | 30,000 | 13 | 51,000 | 81,000 |
| 20 | புதுக்கோட்டை | 1 | 55,000 | 0 | 0 | 2 | 10,000 | 10,000 |
| 21 | சிவகங்கை | 1 | 50,000 | 1 | 10,000 | 13 | 55,000 | 65,000 |
| 22 | விருதுநகர் | 1 | 50,000 | 1 | 10,000 | 1 | 5,000 | 15,000 |
| 23 | திருநெல்வேலி | 1 | 1,00,000 | 2 | 80,000 | 3 | 15,000 | 95,000 |
| 24 | தூத்துக்குடி | 0 | 0 | 2 | 20,000 | 9 | 43,000 | 63,000 |
| 25 | கன்னியாகுமரி | 1 | 30,000 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | **18** | **30,13,000** | **34** | **14,55,000** | **591** | **20,67,000** | **35,22,000** |
| | **சென்னை பெருநகர பால்பண்ணைகள் (இணையம்)** | | | | | | | |
| அ | மாதவரம் பால் பண்ணை | 1 | 5,00,000 | - | - | - | - | - |
| ஆ | அம்பத்தூர் பால் | 1 | 5,00,000 | - | - | - | - | - |

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன் | | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குளிர்விப்பு மையம் | | மொத்த பால் குளிர்விப்பு மையம் | | மொத்தம் |
| | | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | |
| | பண்ணை | | | | | | | |
| இ | சோழிங்கநல்லூர் பால் பண்ணை | 1 | 6,00,000 | - | - | - | - | - |
| ஈ | அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை | 1 | 65,000 | - | - | - | - | - |
| உ | திருவண்ணாமலை பால் பண்ணையுடன் கூடிய பால்பவுடர் தொழிற்சாலை | 1 | 2,00,000 | - | - | - | - | - |
| | **மொத்தம்** | **5** | **18,65,000** | - | - | - | - | - |
| | **ஆக மொத்தம்** | **23** | **48,78,000** | **34** | **14,55,000** | **591** | **20,67,000** | **35,22,000** |

## 8. பால் விற்பனை

பால் மற்றும் பால் பொருட்களுக்கான சந்தையில் 'ஆவின்' நிறுவனத்தின் விற்பனை வாய்ப்பு மிக அதிகமாக உள்ளது. விற்பனையை அதிகரிக்க இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் விற்பனை பிரிவு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் ஆவின், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர) பால் விற்பனையில் 50 சதவீதத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

விற்பனை வருவாயை அதிகரிக்க, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், உரிய இயந்திரங்களை நிறுவி மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

**பல்வேறு ஒன்றியங்களில் உற்பத்தி செய்யப்படும் பால் பொருட்கள்**

| வ. எண் | ஒன்றியம் | பால் பொருட்கள் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | பாதாம் மிக்ஸ் பவுடர் |
| 2 | விழுப்புரம் | குல்ஃபி |
| 3 | வேலூர் | குல்ஃபி, பாதாம் மிக்ஸ் பவுடர், தயிர், நறுமண பால் |
| 4 | கிருஷ்ணகிரி | குல்ஃபி, பாதாம் மிக்ஸ் பவுடர் |
| 5 | சேலம் | தயிர், உயர் வெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட பால், நறுமண பால் |
| 6 | ஈரோடு | பாதாம் மிக்ஸ் பவுடர், குலோப் ஜாமுன் மிக்ஸ், தயிர், குல்ஃபி, சிறப்பு தரத்திலான நெய் (டின்) |
| 7 | கோயம்புத்தூர் | மேங்கோ லஸ்சி, தயிர், நறுமண பால் |

| | | |
|---|---|---|
| 8 | திண்டுக்கல் | பனீர் |
| 9 | மதுரை | சாக்லேட், தயிர், பனீர் |
| 10 | விருதுநகர் | பாதாம் மிக்ஸ் பவுடர் |
| 11 | திருநெல்வேலி | உலர் விதைகள் மிக்ஸ் பவுடர் |
| 12 | கன்னியாகுமரி | பாதாம் மிக்ஸ் பவுடர், குல்ஃபி, சாக்லேட் |

மாவட்ட விற்பனை பிரிவு பின்வரும் வகையான பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

- நிலைப்படுத்தப்பட்ட பால்
- சமன்படுத்தப்பட்ட பால்
- நிறை கொழுப்புப் பால்
- இருநிலை சமன்படுத்தப்பட்ட பால்
- பசும்பால்

அனைத்து பால் பொருட்களான நெய், வெண்ணெய், மோர், தயிர், லஸ்சி, யோகர்ட், குலோப்ஜாமூன், ரசகுல்லா, கோவா, பல்வேறு வகையான சுவைகளில் சுவையூட்டப்பட்ட பால்

மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவற்றை ஆவின் நிறுவனம் தயார் செய்து வருகிறது.

### 8.1 நுகர்வோர் பால் அட்டைகள்

சென்னை பெருநகரில் அதிக நுகர்வோர்களை கவர்வதற்கும், தக்க வைத்து கொள்வதற்கும் மாதாந்திர பால் அட்டை விற்பனை முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வகை பால் அட்டை விற்பனை முறை ஆவின் நிறுவன விற்பனை முறையின் தனி அம்சமாகும். இதனால் எந்த இடையூறும் இல்லாமல் நுகர்வோர்களுக்கு தொடர்ந்து பால் வழங்குவதை உறுதி செய்கிறது.

### 8.2 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் விற்பனை

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பால் பல்வேறு தரப் பரிசோதனைகளுக்குப் பின்னர், பதப்படுத்தப்பட்டு, சமநிலைப் படுத்தப்பட்டு, பல்வேறு வகையிலான அளவுகளில் (200 மிலி, 500 மிலி, 1000 மிலி) பால்

பாக்கெட்டுகளில் நிரப்பப்பட்டு உள்ளூர் நுகர்வோர்களுக்கு மட்டுமல்லாது இதர மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய தேவைக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 15 வரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் நாளொன்றுக்கு சராசரியாக 13.11 இலட்சம் லிட்டர் பாக்கெட் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டுகளில் (2020-21) நாளொன்றுக்கு சராசரி விற்பனையான 11.67 இலட்சம் லிட்டர் பால் அளவின் 12% வளர்ச்சியாகும். மேலும், அதிக நுகர்வோர்களை கவரவும், பால் விற்பனையை அதிகரிக்கவும் அதிவெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட பால் (UHT) அறிமுகம் படுத்தப்பட்டது. இந்த பால் 90 நாட்கள் கெடாமல் அறை வெப்பநிலையிலேயே வைத்துக் கொள்ளலாம்.

## மாவட்ட ஒன்றியம் வாரியான பால் விற்பனை ஒப்பீடு

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் விற்பனை அளவு (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 (15.08.21 அன்று உள்ளபடி) |
| 1 | காஞ்சிபுரம்-திருவள்ளூர் | 23,777 | 34,215 | 57,556 | 74,165 |
| 2 | விழுப்புரம் | 20,876 | 16,600 | 6,276 | 9,311 |
| 3 | கடலூர் | -- | 15,765 | 21,572 | 27,475 |
| 4 | வேலூர் | 71,564 | 68,304 | 60,331 | 66,175 |
| 5 | திருவண்ணாமலை | -- | 7,502 | 8,134 | 9,424 |
| 6 | தர்மபுரி | 27,336 | 6,448 | 4,994 | 5,751 |
| 7 | கிருஷ்ணகிரி | -- | 18,700 | 17,967 | 22,208 |
| 8 | சேலம் | 1,50,241 | 1,55,402 | 1,67,291 | 1,86,494 |
| 9 | நாமக்கல் | 50,023 | 61,349 | 60,199 | 68,523 |
| 10 | ஈரோடு | 64,312 | 63,881 | 57,573 | 61,414 |
| 11 | கோயம்புத்தூர் | 1,46,734 | 1,48,498 | 1,55,191 | 1,73,523 |
| 12 | திருப்பூர் | 14,582 | 13,340 | 15,423 | 20,099 |
| 13 | நீலகிரி | 16,578 | 16,542 | 16,005 | 17,529 |
| 14 | மதுரை | 1,67,259 | 1,76,788 | 1,75,962 | 1,84,340 |
| 15 | தேனி | -- | 6,023 | 5,388 | 5,650 |
| 16 | திண்டுக்கல் | 15,981 | 16,529 | 17,507 | 22,833 |
| 17 | திருச்சி | 1,19,896 | 1,13,406 | 1,16,753 | 1,22,813 |
| 18 | கரூர் | -- | 5,562 | 5,266 | 5,862 |
| 19 | தஞ்சாவூர் | 29,795 | 32,492 | 40,666 | 47,819 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | புதுக்கோட்டை | 14,568 | 17,020 | 18,013 | 23,838 |
| 21 | சிவகங்கை | 37,800 | 43,670 | 54,734 | 63,701 |
| 22 | விருதுநகர் | 5,978 | 6,878 | 6,238 | 8,244 |
| 23 | திருநெல்வேலி | 42,860 | 28,695 | 33,982 | 38,214 |
| 24 | தூத்துக்குடி | -- | 21,921 | 26,187 | 27,319 |
| 25 | கன்னியாகுமரி | 16,004 | 18,079 | 18,145 | 19,095 |
| | **மொத்தம்** | **10,42,164** | **11,13,609** | **11,67,353** | **13,11,816** |

## 8.3 சென்னை பெருநகரில் பால் விற்பனை

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பால் மற்று பால் பொருட்களை விற்பனை செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 15 வரை சென்னை பெருநகர பால் விற்பனை சராசரியாக நாளொன்றுக்கு 13.59 இலட்சம் லிட்டர் ஆக உள்ளது. மேலும், 2021–2022 ஆம் ஆண்டில் 15.00 இலட்சம் லிட்டர் ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

## சென்னை பெருநகரில் பால் விற்பனை

## (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)

| வ. எண் | விவரம் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 (ஆகஸ்ட் 15 அன்று உள்ளபடி) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை பெருநகர பால் விற்பனை | 11.91 | 12.09 | 12.11 | 12.63 | 13.59 |

| | | |
|---|---|---|
| 1. | பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வட்டார அலுவலகம் மூலமாக (மாதாந்திர பால் அட்டை விற்பனை உட்பட) | நாளொன்றுக்கு 5.50 – 6.00 இலட்சம் லிட்டர் |
| 2 | மொத்த பால் விற்பனையாளர்கள் மூலமாக | 5.50 – 6.00 இலட்சம் லிட்டர் |
| 3 | நேரடி ரொக்க விற்பனை மூலமாக | 1.50 – 2.00 இலட்சம் லிட்டர் |

## 8.4 பால் விற்பனை விலை

ஏழை குழந்தைகள் மற்றும் மகளிர் பால் நுகர்வோர்கள் பெரிதும் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி அனைத்து வகையான ஆவின் பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/– குறைத்து 16.05.2021 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**திருத்தப்பட்ட பால் விலையின் பட்டியல் பின்வருமாறு:**

| வ. எண் | பாலின் வகை | பால் பை நிறம் | விவரம் | | 500 மில்லி லிட்டருக்கான விற்பனை விலை (ரூ) (16.05.2021 முதல்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | கொழுப்பு சத்து % | கொழுப்பு அல்லாத இதர சத்து % | அட்டை தாரர் களுக்கு | அதிகபட்ச சில்லரை விற்பனை விலை |
| 1 | இருமுறை சமன் படுத்தப்பட்ட பால் | மெஜந்தா | 1.5 | 9.0 | 18.00 | 18.50 |
| 2 | சமன் படுத்தப்பட்ட பால் | நீலம் | 3.0 | 8.5 | 18.50 | 20.00 |
| 3 | நிலைப் படுத்தப்பட்ட பால் | பச்சை | 4.5 | 8.5 | 21.00 | 22.00 |
| 4 | நிறை கொழுப்புப் பால் | ஆரஞ்சு | 6.0 | 9.0 | 23.00 | 24.00 |

மேற்படி விற்பனை விலை குறைப்பு காரணமாக ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு சராசரி 1.74 இலட்சம் லிட்டர் அதிகரித்துள்ளது.

## 8.5 சென்னை பெருநகரங்களில் பால் பொருட்கள் விற்பனை

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால் பொருட்கள் சென்னை பெருநகர மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சென்னை பெருநகரங்களில் ஆவின் வகை பால் அதிக அளவில் விற்பனையாகிறது. ஆவின் விற்பனைப் பிரிவு சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களை அதிக அளவில் நியமித்து பால் பொருட்களை விற்பனை செய்ய பெரிதும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2019-20 ஆம் ஆண்டில் இருந்த ரூ.19.50 கோடி மாதாந்திர சராசரி விற்பனையானது தற்போது, 2020-21 ஆம் ஆண்டில் ரூ.22.11 கோடி

உயர்ந்து பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது.

சில்லறை விற்பனை கடைகளில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பது மற்றும் விற்பனை செய்வது குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, கவர்ச்சிகரமான வண்ணங்களில் பெயர் பலகைகள், அறிவிப்பு பலகைகள், தொங்கவிடும் விளம்பர அட்டைகள் ஆகியவை சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

முதல் நிலை மார்க்கெட்டிங் ஊழியர்கள் மூலம் சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் அமைந்துள்ள முக்கிய விற்பனை கடைகள் மற்றும் பிக் பஜார், ரிலையன்ஸ் ஃப்ரெஷ், ரிலையன்ஸ் சில்லறை விற்பனை, பெரிய சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்ய புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆவின் செயல்பாடுகளை மேம்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் சென்னை பெருநகரங்களிலும் ஒரே மாதிரியான பாலகங்கள்

அமைக்கப்பட்டுள்ளது. அதிக நுகர்வோர் மற்றும் குழந்தைகளை கவரும் பொருட்டு அதிநவீன பாலகங்கள், பார்க்கிங் வசதி, குழந்தைகள் விளையாடும் பகுதி மற்றும் இதர வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஆவின் பொருட்களை விற்பனை செய்வதைத் தவிர, அதிக இளைய சமுதாய மக்களை வரவேற்க பிற உணவுப் பொருட்களையும் விற்பனை செய்யப்படுகிறது.

## 8.6 சென்னை பெருநகர விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள்

விற்பனை அளவை அதிகரிக்க, சென்னை பெருநகர் மற்றும் புறநகர் பகுதிகளில், பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய ஆவினில் பின்வரும் நன்கு பிணைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டுள்ளது.

**உட்கட்டமைப்பு வசதிகள் (15.08.2021)**

| வ. எண் | உட்கட்டமைப்பு விவரம் | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | விநியோக வழித்தடங்கள் | 113 | 117 | 119 | 132 | 148 | 157 | 157 | 173 |
| 2 | வட்டார அலுவலகங்கள் | 16 | 16 | 16 | 16 | 27 | 27 | 27 | 27 |
| 3 | பால் வழங்கும் நிலையங்கள் | 470 | 470 | 433 | 437 | 441 | 493 | 493 | 456 |
| 4 | விநியோகிக்கும் இடங்கள் | 311 | 311 | 361 | 376 | 485 | 512 | 530 | 597 |
| 5 | பாலகங்கள் | 93 | 93 | 114 | 147 | 221 | 227 | 218 | 248 |
| 6 | மொத்த பால் விநியோகிப்பாளர்கள் | 47 | 71 | 71 | 83 | 84 | 84 | 76 | 11 |
| 7 | பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் | 49 | 49 | 49 | 49 | 49 | 49 | 49 | 49 |
| 8 | ஆவின் உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள் | 184 | 202 | 451 | 556 | 594 | 649 | 651 | 1245 |
| 9 | பால் பொருட்கள் விநியோக வழித் தடங்கள் | 14 | 16 | 25 | 33 | 33 | 36 | 35 | 42 |

## 8.7 சந்தைப்படுத்தல் நிலையங்கள்

பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர் மற்றும் பொது மக்களை எளிதில் சென்றடைய ஏதுவாக பின்வருமாறு உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

1. அனைத்து மாவட்டங்களிலும் தினமும் பால் விநியோகம் செய்ய பால் டிப்போக்கள் மற்றும் பால் விநியோக மையங்கள், விற்பனை நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன.

2. ஆவின் பால் பொருட்களுக்காக பிரத்தியேகமாக விற்பனை நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| அ) | ஆவின் பாலகங்கள் (இணையம் மற்றும் ஒன்றியங்கள்) | – | 58 |
| ஆ) | தனியார் பாலகங்கள் | – | 1,549 |
| இ) | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் நடத்தப்படும் அதிநவீன பாலகங்கள் | – | 37 |
| ஈ) | மொத்த விற்பனையாளர்கள் | – | 321 |

3. அதிக அளவில் விற்பனையாளர்கள் மற்றும் பால் முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**மேலும் கீழ்க்கண்ட வழிவகைகளிலும் ஆவின் பால் வழங்கப்பட்டு வருகிறது.**

1) தொழில் நிறுவனங்கள், கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள், விடுதிகள், அகதிகள் முகாம்கள் ஆகியவற்றிற்கும், பால் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2) திருமணம் மற்றும் பிற விழாக்களுக்கு முன்கூட்டியே சிறப்பு ஆர்டர்களை முன்பதிவு செய்யும் வாடிக்கையாளர்களின் வீட்டி கே சென்று ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

3) ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் பொதுமக்களை சென்றடைய, சிறிய கடைகள், மளிகைக் கடைகள், டீ கடைகள், பேக்கரிகளில் அதிக முயற்சி எடுக்கப்பட்டு சிறப்பு பதிவுத் திட்டத்தின் கீழ் ரூ.1,000/– வைப்புத் தொகை பெற்றுக் கொண்டு சில்லறை விற்பனையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

## 8.8 சிறப்பு விற்பனை முகாம்கள்

கடந்த ஆண்டு தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகையின் போது விற்பனைக்காக இணையம் 5 வகையான ஆவின் சிறப்பு இனிப்புகளை அறிமுகப்படுத்தியது. அனைத்து மாவட்டங்களில் உள்ள அனைத்து நகரங்களிலும் தற்காலிக பார்லர்களை அமைத்து அதன்மூலம் பொது மக்களுக்கு இந்த சிறப்பு இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டன. இதேபோல், கோடையிலும் தற்காலிக பார்லர்கள் அமைக்கப்பட்டு, தயிர், மோர், லஸ்ஸி போன்ற பானங்கள் விற்பனை செய்யப்பட்டது.

## 8.9 ஆவின் பால் பொருட்கள் ஏற்றுமதி செய்தல்

பால் உற்பத்தியாளர்கள் நலனை பாதுகாக்க அனைத்து பாலையும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் கொள்முதல் செய்யப்படுகிறது. 2015–16 ஆம் ஆண்டில் சராசரி பால் கொள்முதல், பால் விற்பனையை விட அதிகரித்து இருந்தது. சுமார் 6–8 இலட்சம் லிட்டர் பால், பால் பொருட்களாக உருமாற்றம் செய்யப்படுகிறது. வெண்ணை மற்றும் பால் பவுடர்

விற்பனையை அதிகரிக்க தமிழக அரசின் பரிந்துரையின்படி ஆவின் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் சேலம் ஒன்றியம் அதிவெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட UHT பால் மற்றும் நறுமண பால் டெட்ரா பாக்கெட்டுகளுக்கு ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது. மேலும் ஈரோடு ஒன்றியம் நெய் ஏற்றுமதிக்கான உரிமம் பெற்றுள்ளது. திருவண்ணாமலை பால் மற்றும் பால் பவுடர் ஆலை, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் மற்றும் நெய்யிற்கான ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது.

தற்போது ஆவின் நிறுவனம் சிங்கப்பூர், ஹாங்காங், கத்தார் மற்றும் துபாய் போன்ற அயல் நாடுகளுக்கு ஆவின் பால் பொருட்கள் ஏற்றுமதி செய்து வருகிறது. இதர வெளிநாடுகளுக்கும் பால் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஆவின் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதுவரை சிங்கப்பூருக்கு ரூ.139 இலட்சம் மதிப்பிலான 2,89,692 லிட்டர் பால் மற்றும் ரூ.13.53 இலட்சம் மதிப்பிலான நெய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மற்றொரு முகவர் மூலமாக இதுவரை ரூ.35.85 இலட்சம் மதிப்பிலான 74,200 லிட்டர் பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

அதே போன்று ஹாங்காங்கிற்கு ரூ.13.47 இலட்சம் மதிப்பிலான 28,080 லிட்டர் பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும் கத்தாருக்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பிலான 15,600 லிட்டர் பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மற்றும் ரூ.28.76 இலட்சம் மதிப்பிலான 6,919 லிட்டர் நெய் துபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆவின் பொருட்களை ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் விற்பனை செய்வதற்கு இரண்டு மொத்த விற்பனையாளர்களாக நியமன உத்தரவும், ஐக்கிய அரபு நாடுகள், துபாய், அபுதாபி, ஷார்ஜா, அஜ்மன், ஓமன், கத்தார், கனடா மற்றும் அமெரிக்கா

(கலிபோர்னியா) ஆகிய வெளிநாடுகளில் ஆவின் பொருட்களை விற்பனை செய்வதற்கு வணிக ஒப்பந்த ஆணைகளை நான்கு வணிக ஏற்றுமதியாளர்களுக்கு 21.08.2021 அன்று வழங்கினார்கள்.

இதன் மூலம் ஆவின் பொருட்கள் வருடத்திற்கு ரூ.60 கோடி விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், எதிர்வரும் காலத்தில் இதர மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் ஆவின் பொருட்களை விற்பனை செய்வதற்கான வணிக வாய்ப்புகள் மேற்கொள்ளப்படும்.

### 8.10 ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள்

கொரோனா பாதிப்புக்கு பின் ஆவினின் ஏற்றுமதி முகவர்கள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நாடுகளுக்கான ஏற்றுமதியை தொடங்கியுள்ளனர். ஆவின் பால் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் விதமாக பக்ரைன், குவைத், ஓமன், சவுதி அரேபியா, கம்போடியா,

இந்தோனேஷியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் ஏற்றுமதி முகவர்களை நியமிப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 8.10.1 ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான முயற்சிகள்

- ஈரோடு ஒன்றியத்திலிருந்து கூடுதல் பால் பவுடர், வெண்ணெய் ஆகிய பால் பொருட்களுக்கான ஏற்றுமதி உரிமம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது
- தென் கிழக்கு ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நெய் ஏற்றுமதி செய்வதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது
- பனீர் மற்றும் தயிர் ஏற்றுமதி செய்வதற்கு சேலம் ஒன்றியத்திலிருந்து கூடுதல் உரிமம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது
- திருவண்ணாமலை–அம்மாபாளையத்தில் இருந்து பால்பவுடர் மற்றும் நெய் ஏற்றுமதி செய்யும் உரிமம் பெறப்பட்டு ஏற்றுமதியினை தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

### 8.11 எதிர்நோக்கப்படும் கூடுதல் வருவாய் – ரூ.30 கோடி

### 8.11.1 அறிமுகப்படுத்தப்பட உள்ள பால் பொருட்கள் – ரூ.22 கோடி

- தற்சமயம் வெளிசந்தையில் குழந்தைகளின் உணவு, டெய்ரி ஒயிட்னர், பாலாடைக்கட்டி, திரட்டுப்பால் மற்றும் புதிய இனிப்பு வகைகளுக்கு தேவை அதிகமாக உள்ளது
- ஆவின் நிறுவனம் மேற்காண் பால் பொருட்களை விரைவில் சந்தையில் அறிமுகப்படுத்தி விற்பனையை அதிகரித்து ஆண்டிற்கு கூடுதல் வருவாய் ரூ.22 கோடி ஈட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### 8.11.2 மதிப்பு கூட்டப்பட உள்ள பால் பொருட்கள் – ரூ.6 கோடி

- வெண்ணெய் சில்லுகள், தயிர் பாக்கெட், நறுமண பால் மற்றும் ஸ்லிம் மில்க் வகைகளுக்கு சந்தையில் அதிக அளவில் தேவை இருப்பதை கருத்தில் கொண்டு

மேற்காண் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் அதிகளவில் உற்பத்தி செய்து விற்பனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

- புதிய மதிப்புகூட்டப்பட்ட பால் பொருட்களின் விற்பனை மூலமாக வருடத்திற்கு கூடுதலாக ரூ.6 கோடி வருவாய் ஈட்ட முடியும்

### 8.11.3 விலை மாற்றி அமைக்கப்படும் பால் பொருட்கள் – ரூ.2 கோடி

- தற்சமயம் ஆவின் உற்பத்தி செய்கின்ற மதிப்புகூட்டிய பொருட்களான பாதாம் பவுடர், வெண்ணெய், நெய், கோவா, நறுமணப்பால் ஆகியவற்றின் விற்பனை விலையை நிர்ணயம் செய்து நீண்டகாலமானதாலும், தற்போது உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதாலும் மேற்காண் பொருட்களின் விலையை மாற்றி அமைப்பது அவசியமாகிறது. **இந்த நடவடிக்கை மூலம் நிறுவனத்திற்கு ரூ.2 கோடி கூடுதலாக வருவாய் கிடைக்கும்**

- **மதிப்புகூட்டிய பொருட்களின் விலையை மாற்றி அமைத்த பிறகும் தனியார் நிறுவனங்கள் நிர்ணயத்துள்ள விலையை காட்டிலும் குறைவாகவே உள்ளது**

## 8.12 விற்பனை விரிவாக்க திட்டங்கள்

- ஆவின் நிறுவனத்தால் அரசு கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், மாணவர் விடுதிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய அரசு பரிந்துரை செய்யும் பட்சத்தில் நிறுவனத்தின் விற்பனை வருவாய் அதிகரிக்கும்
- தற்போது ஆவின் நிறுவனம், மின்னணு வணிகத்தில் மிகவும் குறைந்த அளவே பங்காற்றுகிறது. வளர்ந்து வரும் மின்னணு வணிகத்திற்கு ஏற்ப ஆவினின் பங்கு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் (e–Commerce)
- தற்போது சிங்கப்பூர், ஹாங்காங், கத்தார் மற்றும் துபாய் ஆகிய வெளிநாடுகளுக்கு அதிவெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட (UHT)

பால் மற்றும் நெய்யினை மட்டுமே ஏற்றுமதி செய்து வருகிறது. மேலும், ஸ்ரீலங்கா, மொரிசியஸ், மலேசியா போன்ற வெளிநாடுகளில் வாழும் தமிழர்களை மையப்படுத்தி அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இதன் மூலம் ஆவின் பால் பொருட்கள் விற்பனையை கூடுதலாக 5 மடங்கு என்ற அளவிற்கு அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

- ஆன்மீக வழிபாட்டு தலங்களில் சிறிய அளவு நெய் பாக்கெட்களின் (5ml, 10ml, 25ml, 50ml, 100ml) தேவை அதிகமாக உள்ளதை பூர்த்தி செய்யும் விதத்தில் ஆவின் நிறுவன நெய் பாக்கெட்டுகளின் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், அடுமனைகள் (Bakery) மற்றும் இனிப்பு கடைகளில் ஆவின் பொருட்களின் விற்பனையை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- தமிழ்நாடு முழுவதும் பால் மற்றும் பால் பொருட்களுக்கு ஒரே சீரான வடிவமைப்பு

(Packing Design) ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

- அதிக எண்ணிக்கையில் சில்லரை விற்பனையாளர்களை நியமித்து பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையினை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது
- புதிய விற்பனை வாய்ப்புகள் உள்ள இடங்களில் மொத்த விற்பனையாளர்களை நியமிக்கப்படுவார்கள்

## 8.13 நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்

கட்டணமில்லா தொலைபேசி வசதியுடன் (எண். 1800-425-3300) கூடிய 24 x 7 மணிநேர நுகர்வோர் சேவை மற்றும் குறைதீர்க்கும் மையம் ஒன்று, சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் தலைமை அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இதன் மூலம் நுகர்வோர், இம்மையத்தை அணுகி தங்களது கருத்துக்களை பதிவு செய்து, குறைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ள ஏதுவாகிறது. கடந்த 2020-2021-ல்

மொத்தம் 394 புகார்கள் பெறப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டுள்ளது.

இணைய வழி மூலமாக, நுகர்வோர்களின் புகார்கள் பெறப்பட்டு அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 9. தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

பால் உற்பத்தியாளர்கள் நிலையான வருவாய் பெறும் வகையில் பால் விலையை உறுதி செய்வதற்கும், பாலின் கொழுப்பு சத்து (FAT) மற்றும் கொழுப்பு அல்லாத இதர திடப்பொருட்களின் (SNF) தரத்தை அடிப்படையாகக் கொண்டு, தரமான பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்குவதற்கும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம் 2006–ன்படி நிர்ணயத்துள்ள தரத்தை உறுதி செய்வதற்கும், பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்யப்படும் ஆரம்ப கட்டத்திலிருந்து நவீன

தொழில்நுட்ப கருவி கொண்டு தரமான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

மேலும், மொத்த பால் குளிர்விப்பான் / குளிரூட்டும் நிலையம் / மாவட்ட ஒன்றிய பால் பண்ணைகள் / சென்னை பெருநகர பால் பண்ணைகளிலுள்ள தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களில் மேம்பட்ட தரக் கட்டுப்பாட்டு சோதனைகள் நடத்தப்பட்டு, கலப்படமற்ற, பாதுகாப்பான, தரமான பால் அனுமதிக்கப்பட்ட தரத்தில் கொள்முதலை பௌதீக, வேதியியல் மற்றும் நுண்ணுயிர் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், ஊழியர்கள், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் போன்ற அனைத்து ஊழியர்களுக்கும் போதுமான பயிற்சி அளிக்கப்பட்டு, அத்துடன் பாலை பரிசோதிப்பதில், முறையான பரிசோதனை வழிமுறைகள் பின்பற்றப்பட்டு பாலின் தரம் உறுதி செய்யப்பட்டு நுகர்வோருக்கு வழங்கப்படுகிறது.

பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்கள், குளிரூட்டும் நிலையங்கள், தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம், ஒன்றியம் மற்றும் இணையத்தில் நவீன தொழில்நுட்ப கருவிகள் (FTIR) கொழுப்பு (FAT) மற்றும் கொழுப்பு அல்லாத இதர திடப்பொருட்கள் (SNF) அளவிடுவதற்கு மற்றும் பாலில் கலப்படங்களை கண்டறியவும் பயன்படுத்தப்படுகின்றன. தூய்மையான மற்றும் சுகாதாரமான பால் சேகரிப்பை உறுதி செய்வதற்காக பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்கள் முதல் மாநகர பால் பண்ணை தொழிற்சாலை வரை பால் மற்றும் பால் பொருட்களை நேரடியாக கையாளுபவர்களுக்கு உணவு தரத்துடன் கூடிய கையுறை, முகக்கவசம் மற்றும் தலைக்கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு செயல்முறைகளுக்குப் பின் பால் கையாளும் பாத்திரங்கள், இயந்திரங்கள் மற்றும் பால் ஏற்றி செல்லும் வாகனங்கள் ஆகியவற்றின் சுத்தம் உறுதிசெய்யப்படுகிறது.

பெரும்பாலான மாவட்ட ஒன்றிய பால்பண்ணைகள் மற்றும் பெருநகர

பால்பண்ணைகள், பால் மற்றும் பால் பொருட்களின் உணவு பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதி செய்ய தேவையான தரச் சான்றுகள் பெற்றுள்ளன. ஈரோடு, சேலம் ஒன்றியங்கள் மற்றும் திருவண்ணாமலையில் உள்ள பால் பவுடர் ஆலை ஆகியவை பால் மற்றும் பால் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தேவையான ஏற்றுமதி உரிமம் மற்றும் இந்திய தர நிர்ணய ஆணையம், அக்மார்க் தர சான்றுகள் முறையே கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் மற்றும் நெய் ஆகியவற்றிற்கு பெற்றுள்ளன. இதேபோல், நுகர்வோருக்கு சுகாதாரமான மற்றும் தரமான பால் மற்றும் பால் பொருட்களை வழங்குவதை உறுதி செய்வதற்காக நவீனமயமாக்கப்பட்ட சோதனை உபகரணங்களைப் பயன்படுத்தி இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பல்வேறு மட்டங்களில் தரமான சோதனைகளை நடத்தி வருகின்றன.

பால் மேம்பாட்டுத்துறை அதிகாரிகள், ஆவின் அதிகாரிகள், சுகாதாரத் துறை அதிகாரிகள், கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள் மற்றும்

உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் ஆகியோர் சம்பந்தப்பட்ட பால் உற்பத்தியாளர்கள், பால் நுகர்வோர் மற்றும் உள்ளூர் மக்களுடன் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்துவதன் மூலம் பால் கலப்படம் குறித்த விழிப்புணர்வும், அத்தகைய கலப்படத்தின் விளைவுகள் குறித்த விழிப்புணர்வு உருவாக்கப்படுகிறது. பொது மக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் அதிகாரிகளால் பால் மற்றும் பால் பொருட்களின் தரம் குறித்து அவ்வப்போது கூட்டம் நடத்தப்பட்டு, அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்ட ஆட்சியர்கள், பால்வள மேம்பாட்டிலும், தனியார் துறையிலும் உணவு பாதுகாப்பை உறுதி செய்ய தகுந்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

உணவுப் பாதுகாப்பு சட்டத்தின்படி பரிந்துரைக்கப்பட்ட அதிகபட்ச அஃப்லாடாக்சின் அளவான 0.5 பிபிஎம் (ppm) அளவிற்கு மிகாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக மாவட்ட

ஒன்றியங்கள் மற்றும் இணைய பால்பண்ணைகளில் பல்வேறு பரிசோதனைகள் நடத்தப்பட்டு கண்டறியப்படுகிறது. இதன் மூலம் நுகர்வோருக்கு பாதுகாப்பான பால் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

ஒன்றிய அரசின் தேசிய பால் வள மேம்பாட்டுத் திட்டம் (National Program for Dairy Development) NPDD –ன் கீழ் பால் தரம் உயர்த்தும் திட்ட செயலாக்கம் 2019–2020 மூலம் சென்னை பெருநகர் – 4 மற்றும் 17 மாவட்ட ஒன்றிய பால் பண்ணைகள் என 21 பால் பண்ணைகளிலுள்ள பால் மற்றும் பால் பொருட்கள் மேம்பாட்டிற்காகவும் பாலில் கலக்கப்படும் கலப்பட வேதிப் பொருட்களை கண்டுபிடித்து அவற்றை தவிர்க்கவும், ஆய்வங்களை மேம்படுத்திட தலா ரூ.85 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.17 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாதவரத்தில் மாநில மைய பரிசோதனை கூடம் (State Central Laboratory) ரூ.8 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த

ஆய்வகத்தில் மாநிலம் முழுவதிலுமிருந்து பெறப்படும் பால் மாதிரிகளின் தரம், பாலில் கலப்பட வேதிப் பொருட்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்டறிதல், பாலில் உள்ள நன்மை மற்றும் தீமை செய்யும் பாக்டீரியாக்கள், பூச்சிக்கொல்லிகள், நோய் எதிர்ப்பு மருந்துகள், கன உலோகங்கள் மற்றும் பூஞ்சைகள் (அஃப்லாடாக்சி ) ஆகியவற்றில் எவையேனும் உள்ளனவா என்பதை முழுமையாக ஆய்வு செய்து, தரமான மற்றும் பாதுகாப்பான பால் மற்றும் பால் பொருட்கள் மட்டும் நுகர்வோர்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்தும் வகையில் அதி நவீன பரிசோதனைக் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது.

## 10. மாநில / ஒன்றிய அரசு நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பால்பண்ணை வளர்ச்சி திட்டங்கள்

### 10.1 தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தி கீழ் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்புகள் (NADP)

இத்திட்டம் 2007-2008 முதல் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இத்திட்டமானது கால்நடை சுகாதாரம் பால் கொள்முதல், குளிரூட்டுதல் மற்றும் சந்தைபடுத்துதல் தொடர்பான உட்கட்டமைப்பு செயல்பாடுகளை உள்ளடக்கியது.

இத்திட்டத்தின் வாயிலாக பால் உற்பத்தியாளர்களின் இல்லத்திற்கே சென்று கால்நடைகளுக்கு 162 கால்நடை மருத்துவர்கள் மூலம் மருத்துவ வசதி மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன.

கால்நடை சுகாதாரம், பால் கொள்முதல், குளிரூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக

இதுவரை இத்திட்டத்தின் கீழ் ரூ.269.64 கோடி நிதி உதவி பெறப்பட்டுள்ளது.

முழுவதும் தானியங்கியாக நாளொன்றுக்கு 2 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட பனீர் உற்பத்தி ஆலை அமைக்க ரூ.10.35 கோடி மதிப்பீட்டில் 2020-2021க்கான திட்டத்தில் ரூ.5.17 கோடி மானியமாக பெறப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டில், விருதுநகரில் கால்நடை தீவனத் தொழிற்சாலை அமைக்கவும், பால் பகுப்பாய்வு கருவி போன்றவை ரூ.14.86 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படவும் நிதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**10.2 தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம்.** (NPDD)

ஒன்றிய அரசின் தேசிய பால்வள மேம்பாட்டு திட்டமானது பால் உற்பத்தி, கொள்முதல், இணையம் மற்றும் ஒன்றியங்களில் பால் பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்யவும் தேவையான உட்கட்டமைப்பை அடிப்படை

நிலையிலேயே உருவாக்குவதற்கு உதவுகின்றது. இத்திட்டம், விவசாயிகளுக்கு பயிற்சி உள்ளிட்ட விரிவாக்க நடவடிக்கைகளை செயல்படுத்த நிதி அளிக்கின்றது.

இத்திட்டம் 2014-2015 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020-2021 வரை இத்திட்டத்தின் கீழ் ரூ.146 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பால் கொள்முதல், பால் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்தவும், பால் விற்பனை தொடர்பான உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்காகவும் ஒன்றிய அரசின் பங்களிப்பில் இதுவரை மொத்தம் ரூ.90.23 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டதில் பாடலூரில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட புதிய பால் பதப்படுத்தும் ஆலை மற்றும் மதுரை பால் பண்ணையில், நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலில் உள்ள நீரை ஆவியாக்கும் இயந்திரம் ஆகியன நிறுவப்பட்டுள்ளன.

தரமான பால் உற்பத்திக்கான வசதிகளை வலுப்படுத்தவும், கிராம அளவில் குளிரூட்டும் வசதிகளை மேம்படுத்தவும், அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் மொத்த பால் குளிர்விப்பான்கள், பால் சேகரிப்பு புள்ளி விவரக் கருவிகள் மற்றும் தானியங்கி பால் சேகரிப்பு கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூரில் ரூ.115 இலட்சம் மானியத்தில் நோய் கிருமிகளை கண்டறியும் ஆய்வகம் அமைத்திட நிதியுதவி பெற்று உபகரணங்கள் வாங்கும் பணி மற்றும் கட்டிட பணி தொடங்கப்பட்டுள்ளது.

## 10.3 தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு திட்டங்கள் (NABARD–RIDF)

மாநில அரசானது, கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறும் வகையில், பால் கூட்டுறவு உற்பத்தி தொழில் உட்கட்டமைப்பினை

மேம்படுத்த, நபார்டு கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு மானிய நிதி மூலம் நிதி உதவி வழங்கி வருகிறது. கடந்த 2014-2015 முதல் 2018-2019 வரை ரூ.220.30 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் நாமக்கல், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்ட ஒன்றியங்களில் முறையே பால் குளிரூட்டும் நிலையம், நிர்வாக அலுவலக கட்டடம், பால் குளிர்விக்கும் அறை, பாலாடைகட்டி தொழிற்சாலை மற்றும் விருதுநகரில் நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் உற்பத்தி ஆலை ரூ.48.62 கோடி மதிப்பீட்டில் நிறுவிட நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நபார்டு வங்கியிடம் நிதி ஒப்புதல் பெற கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 10.4 பால் பொருள் பதப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (NABARD-DIDF)

இத்திட்டமானது ஒன்றிய அரசின் நிதி உதவியுடன், பால் பதப்படுத்தும் ஆலைகளை நவீனப்படுத்தவும், மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க ஏதுவாக

இயந்திரங்களை நவீனப்படுத்தி நுகர்வோருக்கு தரமான பால் வழங்குவதற்கும், பாலுற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு நல்ல விலை பெறவும் வழிவகைப்படுத்துவதை நோக்கமாக கொண்டது.

கீழே குறிப்பிட்டுள்ள நான்கு திட்டங்களுக்கு ரூ.379.29 கோடி மொத்த நிதிச்செலவில் நபார்டு வங்கியிடமிருந்து 6.5 சதவீதம் ஆண்டு வட்டிக்கு ரூ.303.42 கோடி கடனாக பெற 2019–20க்கான நிதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

1. தஞ்சாவூரில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட முழுவதும் தானியங்கி புதிய பால் பண்ணை.
2. திருச்சியில் நாளொன்றுக்கு 6,000 லிட்டர் கையாளும் திறன் கொண்ட ஐஸ்கிரீம் ஆலை மற்றும் பால் பொருட்கள் ஆலை.
3. சேலத்தில் நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணை மற்றும் நாளொன்றுக்கு 30

மெட்ரிக் டன் அளவு கொண்ட பால் பவுடர் ஆலை

4. சென்னை மாதவரத்தில் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணை (நாளொன்றுக்கு 15 இலட்சம் லிட்டர் அளவாக விரிவாக்கக்கூடியது) நிறுவப்படும்.

## 10.5 இராஷ்டிரிய கோகுல் மிஷன் – வம்சாவழி சோதனை திட்டம்

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ், வேலூர், ஈரோடு, சேலம் ஆகிய 3 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ரூ.2,087.51 இலட்சம் மதிப்பீட்டில் வம்சாவழி சோதனை திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

- உறைவிந்து நிலையங்களுக்கு தேவையான உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளைகளை உற்பத்தி செய்தல்

இளம் பொலி காளைகளை மரபியல் ரீதியாக மதிப்பீடு செய்தல், அப்பொலி காளைகளின் தாய் மற்றும் தந்தையை தேர்வு செய்து அதன் மூலம் தொடர்ச்சியாக மரபியல் ரீதியான முன்னேற்றங்களை அடைதல்

இத்திட்டத்தின் மூலம் 2023–2024 க்குள் 225 உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளை கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 180 பொலிகாளை கன்றுகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது வரை 53 பொலிகாளை கன்றுகள் இத்திட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, அவற்றுள் 27 உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளை கன்றுகள் பல்வேறு பொலிகாளை பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன.

## 10.6 தேசிய கால்நடை இயக்கம் (NLM)

தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ், பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்கு காப்பீடு,

மொத்த காப்பீடுத் தொகையில் 50 சதவீத மானியம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் வழங்கப்படுகிறது.

2020−21 ஆம் ஆண்டு, 1.71 இலட்சம் கறவை பசுக்களுக்கு ஆவின் நிறுவனத்தின் மூலம் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது, 2021−22 ஆம் ஆண்டு இரண்டு இலட்சம் கறவை மாடுகளுக்கு காப்பீடு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 10.7 தேசிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் (NAIP)

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ், சிறந்த மரபியல் திறனுள்ள பொலிகாளைகளின் உறைவிந்து குச்சிகளை கொண்டு கிராமங்களில் உள்ள பசுவினங்கள் மற்றும் எருமையினங்களின் பால் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்காக, செயற்கைமுறை கருவூட்டல் வசதிகள் 50 சதவீதத்திற்கும் குறைவாக உள்ள கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, உதகமண்டலம், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம்

மற்றும் விருதுநகர் ஆகிய 12 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட 60,000 கறவைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் என்ற இலக்கில் 59,899 கறவைகளுக்கு உயர்மரபியல் திறனுள்ள பொலிகாளைகளின் விந்து குச்சிகள் மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 1,50,000 கறவைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் என்ற நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 1,51,921 கறவைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ் 100 சதவீத மானியத்தில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை வழியாக கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மூலம் கள அளவில் செயற்படுத்தப்படுகிறது.

## 10.8 தீவன சாகுபடி

### மாநில தீவன மேம்பாட்டு திட்டம் (2019–2020)

சேலம் மற்றும் விழுப்புரம் ஒன்றியங்கள் அடையாளம் காணப்பட்டு மாநில தீவன மேம்பாட்டுத் திட்டத்தின் (2019–2020) கீழ் ரூ.1.645 கோடி செலவில் பசுந்தீவனம் பயிரிடப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் பசுந்தீவனம் வழங்கும் திட்டமாகும்.

### தீவன வங்கி (Fodder Bank)

பால் உற்பத்தியாளர்களின் கால் நடைகளுக்கான பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்யும் வகையில், பால் உற்பத்தியாளர்களுக்கு இலவசமாக தீவன விதைகள் வழங்கப்பட்டு அவர்களின் சொந்த நிலத்தில் சுமார் 25,000 ஏக்கரில் பசுந்தீவனம் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இணையம் மற்றும் ஒன்றியங்களில் காலியாக உள்ள நிலங்களில் சுமார் 83 ஏக்கரில் பசுந்தீவனம் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கால்நடைகளுக்கான பசுந்தீவன தட்டுப்பாட்டை குறைக்க இயலும்.

## 11. முக்கிய உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பங்களை சார்ந்த திட்டங்கள்

கீழே குறிப்பிட்டுள்ள ஐந்து திட்டங்களுக்கு ரூ.307.44 கோடி மொத்த நிதித்தேவையில் நபார்டு வங்கியிடமிருந்து 6.5% ஆண்டு வட்டிக்கு ரூ.245.95 கோடி கடனாக பெற 2020–21–க்கான நிதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

1. அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் பால்பண்ணைகள் முறையே நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டரிலிருந்து 8 இலட்சம் லிட்டராகவும், 4 இலட்சம் லிட்டரிலிருந்து

7.5 இலட்சம் லிட்டராகவும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2. பால் பவுடர் உற்பத்தி ஆலை, அம்மாபாளையத்தில் வெண்ணெய் பேக்கிங்கிற்கான உட்கட்டமைப்பு, நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் உற்பத்தி, சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் கிரீ கையாளுதலுக்கான கூடுதல் உட்கட்டமைப்பு, அம்பத்தூரில் ஐஸ்கிரீம் பேக்கிங் இயந்திரம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.
3. விருதுநகர் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 0.25 இலட்சம் லிட்டர் திறனில் கொள்ளளவு பாலை அதிவெப்ப நிலையில் பதப்படுத் நறுமணப்பால் (UHT) தயாரிக்கும் பால்பண்ணை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
4. புதியதாக உருவாக்கப்பட்டு ள தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் திறன் மற்றும்

மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் வசதியுடன் கூடிய புதிய பால் பண்ணை அனியாபரநல்லூர் கிராமத்தில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

5. புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தேனி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் வசதியுடன் கூடிய புதிய பால் பண்ணை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், புதிய ஐஸ்கிரீம் உற்பத்தி தொழிற்சாலை சேலம் மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் பண்ணை வளாகத்தில் ஒன்றிய மற்றும் இணையத்தின் நிதி மூலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 11.1 அதிவெப்ப நிலையில் (UHT) பால் பதப்படுத்தும் ஆலை, சோழிங்கநல்லூர் பால்பண்ணை

உயர் வெப்ப நிலையில் 135 டிகிரி செல்சியஸ்க்கு மேல் சூடேற்றப்பட்ட பால் நுண்ணுயிரிகளற்ற சூழ்நிலையில் சிப்பம் கட்டப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பால் பாக்கெட்டுகள் சாதாரண அறை வெப்பநிலையில் 90 நாட்கள் வரை இருப்பு வைத்திருக்கலாம். ரூ. 35.98 கோடி செலவில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தவும், நுண்மங்கள் அழிக்கப்பெற்ற நிலையில் சிப்பங்கட்டவும் ஒரு புதிய யு.எச்.டி (UHT) பால் ஆலை நிறுவப்பட்டு, உயர்நிலை நுகர்வோரை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது மட்டுமின்றி, ஏற்றுமதி தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. மேலும், இது 'ஆவின்' சந்தைப்பங்கை விரிவுபடுத்த ஒரு வாய்ப்பாகவும் அமைகிறது.

## 11.2 அதிநவீன பாலகங்கள்

ஆவினை விளம்பரப்படுத்தவும், அடையாள மேம்பாட்டிற்காகவும், குழந்தைகள் விளையாடும் பகுதி, பார்க்கிங் பகுதி, மற்றும் குளிரூட்டப்பட்ட இருக்கை ஏற்பாடுகள் போன்ற வசதிகளுடன் கூடிய அதிநவீன பாலகங்கள் சென்னை பெருநகரிலும் மாவட்ட தலைநகரங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை பெருநகரில் 21 அதிநவீன பாலகங்களும், மாவட்டங்களில் 43 அதிநவீன பாலகங்களும் நிறுவப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

## 11.3 பால்பண்ணைகளில் மரபு சாரா எரிபொருள் பயன்பாடு

தற்போது, நாளொன்றுக்கு 1.11 இலட்சம் லிட்டர் சூடான நீரை (80°C) உற்பத்தி செய்ய 8 பால்பண்ணைகள், 4 குளிர்விக்கும் மையங்கள் மற்றும் 100 மொத்த பால் குளிரூட்டிகள், சூரிய நீர்சூடாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், உலை எண்ணெய் செலவினை சேமிக்க

சோழிங்கநல்லூர் மற்றும் சேலம் பால் பண்ணைகளில் பரவளைய செறிவூட்டிய சூரிய வெப்ப அமைப்பை நிறுவியுள்ளது. பகல் நேரங்களில் பால் பண்ணை இயக்கிட ஒரு சூரிய வெப்ப அமைப்பு திட்டம் மதுரை பால்பண்ணையில் ரூ.2.00 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் 2 மெகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தி ஆலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 11.4 ஒருங்கிணைந்த பால்பண்ணை மேலாண்மை திட்டம் (IDMS)

பால் கூட்டுறவுத் துறை டிஜிட்டல் இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்க உதவும் பொருட்டு, தமிழக அரசு "ஐடிஎம்எஸ்" திட்டம் என்று அழைக்கப்படும் மின்–ஆளுமை திட்ட முயற்சியை மேற்கொண்டுள்ளது. ஐ.டி.எம்.எஸ் திட்டம் கிராம அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால்

உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் அனைத்து நடவடிக்கைகளையும் கணினி மயமாக்கல் மற்றும் தானியங்கி மயமாக்கலுக்கு உதவுகிறது. முதல் கட்டமாக, இந்த "ஐடிஎம்எஸ்" திட்டம் 300 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், 4 சமன்படுத்தப்பட்ட பால்பண்ணைகள் மற்றும் இணையம் ஆகியவற்றில் ரூ.46.55 கோடி செலவில் அனைத்து வணிக செயல்பாடுகளும் டிசம்பர் 2019 வரையறை செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 100% மானிய உதவியாக ஒன்றிய அரசு ரூ.18.34 கோடியை வழங்கியுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து அலகுகளிலும் இத்திட்டம் 31.12.2019 முடிக்கப்பட்டு 01.01.2020 முதல் 30.10.2020 வரை மென்பொருள் உறுதிதன்மை பலப்படுத்தப்பட்டு 01.11.2020 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

2021–2022 நிதியாண்டில் மீதமுள்ள 7,700 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு

சங்கங்கள் மற்றும் 21 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள், 200க்கும் மேற்பட்ட மொத்த பால் குளிர்விப்பான்களுக்கு இந்த திட்டத்தை ரூ.200 கோடி அதிகரித்த செலவினம் / மதிப்பிடப்பட்ட செலவில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இணையம், கைபேசி தளத்தின் மூலம் இத்திட்டத்தின் நன்மைகள் அனைத்து விவசாயிகள், நுகர்வோர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் ஆகியோருக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது. இதன்மூலம், டிஜிட்டல் உலகில் நிறுவனத்தை விளம்பரப்படுத்தி விற்பனையை அதிகரிக்க வழி வகுக்கும்.

## 11.5 மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுதல்

தூய பால் உற்பத்தியின் தொடக்கமாக, குளிரூட்டல் வசதியுடன் கூடிய பால் குளிர்விப்பான்கள் பால் சேகரிப்பு மையங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் நிறுவப்பட்டு, பாலின் ஆரம்ப தரத்தை தக்க வைத்திருக்க பாலை குளிர்விக்க உதவுகின்றன. குளிரூட்டும் மையங்கள் மாற்றி

அமைக்கப்பட இருப்பதால் மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ஒன்றிய / மாநில அரசு திட்டங்களின் கீழ் 500, 1,000, 2,000, 3,000 மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்த பால் குளிர்விப்பான்கள், 5 முதல் 10 கி.மீ சுற்றளவில் செயல்படும் சங்கத்தின் (அல்லது) கிளை சங்கங்களின் சராசரி மொத்த பால் கொள்முதல் அளவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு நிறுவப்படுகின்றன.

இதுவரை, நாளொன்றுக்கு 20.67 இலட்சம் லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட 591 மொத்த பால் குளிர்விப்பான்கள் பல்வேறு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நிறுவப்பட்டுள்ளன.

## 12. சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் நிதி செயல்பாடு

### 12.1 கூட்டுறவு சங்கங்களின் இலாப நட்ட விவரம்

2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில் பால் கூட்டுறவு சங்கங்களில் இலாப நட்ட விவரம் கீழ்கண்டவாறு:

| வ. எண். | ஆண்டு | இலாபத்தில் இயங்கும் சங்கங்களின் எண்ணிக்கை | நட்டத்தில் இயங்கும் சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2018-19 | 6,665 | 3,282 |
| 2 | 2019-20 | 6,364 | 3,264 |

நட்டத்தில் செயல்படும் சங்கங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து நட்டத்திற்கான காரணத்தை அறிந்து அதை நிவர்த்தி செய்து அனைத்து சங்கங்களும் இலாபத்தில் இயங்கிட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 12.2 மாவட்ட ஒன்றியங்களில் இலாப நட்ட விவரம்

2015–2016 ஆம் ஆண்டு முதல் 2020–21 ஆம் ஆண்டு வரை மாவட்ட ஒன்றியங்களின் இலாப நட்ட விவரம் கீழ்கண்டவாறு:

| வ. எண். | ஆண்டு | மொத்தம் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | 2015–16 | 82.77 நட்டம் |
| 2 | 2016–17 | 111.78 இலாபம் |
| 3 | 2017–18 | 62.26 நட்டம் |
| 4 | 2018–19 | 93.20 நட்டம் |
| 5 | 2019–20 | 1.33 இலாபம் |
| 6 | 2020–21 | 97.14 இலாபம் (உத்தேசம்) |

**மாவட்ட ஒன்றியங்கள் இலாபம் குறைவதற்கான காரணங்கள் கீழ் கண்டவாறு:**

1) பால் பவுடர் விற்பனை:

| வ. எண். | ஆண்டு | உற்பத்தி செலவு | சராசரி விற்பனை விலை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2017–18 | கிலோ ஒன்றுக்கு ரூ.240/– | கிலோ ஒன்றுக்கு ரூ.163.31/– | ரூ.120.08 கோடி இழப்பு ஏற்பட்டது |
| 2 | 2018–19 | கிலோ ஒன்றுக்கு ரூ.240/– | கிலோ ஒன்றுக்கு ரூ.141.79/– | ரூ.185.36 கோடி இழப்பு ஏற்பட்டது |

2) 16.12.2016 முதல் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதிய தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.3500/–ம் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப கருணை ஓய்வூதியமாக ரூ.1750/– வழங்கியதின் காரணமாகவும், 28.11.2019 முதல் கருணை ஓய்வூதியம் ரூ.3500/– லிருந்து ரூ.4000/–ஆக உயர்த்தியும், குடும்ப கருணை ஓய்வூதியம் ரூ.1750/–லிருந்து ரூ.2000/–ஆக உயர்த்தியும் வழங்கியதின்

காரணமாகவும் மாவட்ட ஒன்றியங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.12.62 கோடி கூடுதல் செலவாகிறது.

3) 01.10.2017 முதல் மாவட்ட ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு 7–வது ஊதியக்குழு பரிந்துரையின்படி உயர்த்தி வழங்கியதின் காரணமாக மாவட்ட ஒன்றியங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.24 கோடி கூடுதல் நிதி சுமை ஏற்பட்டுள்ளது.

4) மாவட்ட ஒன்றியங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து கடன் தொகை ரூ.104.16 கோடிக்கு வட்டி விகிதம் ஆண்டு ஒன்றுக் 10.5 சதவீதமாக 25.02.2019 முதல் மாற்றி அமைத்ததில் மாவட்ட ஒன்றியங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.10.94 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

5) 16.05.2021 முதல் பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/–குறைத்ததினால் மாவட்ட ஒன்றியங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10.97 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

## 12.3 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணைய இலாபம் மற்றும் நட்ட விவரம்

### I. இணையம்:

பசும்பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.5.00–ம், எருமைப்பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.4.00–ம் உயர்த்தி, பால் விற்பனை விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.10.00–ஆக 01.11.2014 முதல் உயர்த்தி வழங்கியதிலிருந்து இணையம் தொடர்ச்சியாக 2015–2016 (2019–20 தவிர்த்து) ஆம் ஆண்டு முதல் இலாபம் ஈட்டி வந்தது.

2015–2016 ஆம் ஆண்டு முதல் 2020–21 ஆம் ஆண்டு வரை இணையத்தின் இலாப நட்ட விவரம் கீழ்கண்டவாறு:

| வ. எண். | ஆண்டு | மொத்தம் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | 2015–16 | 70.40 இலாபம் |
| 2 | 2016–17 | 27.56 இலாபம் |

| | | |
|---|---|---|
| 3 | 2017–18 | 34.30 இலாபம் |
| 4 | 2018–19 | 29.31 இலாபம் |
| 5 | 2019–20 | 94.09 நட்டம் |
| 6 | 2020–21 | 38.15 இலாபம் (உத்தேசம்) |

**இணையத்தின் இலாபம் குறைவதற்கு உண்டான காரணங்கள் கீழ் கண்டவாறு:**

1) 2016–2017ஆம் ஆண்டில் இணைய பணியாளர்களுக்கு உரிமை விடுப்பு குழு காப்பீட்டு திட்ட செலவிற்காக ரூ.29.87 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2) 16.12.2016 முதல் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதிய தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.3500/–ம் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப கருணை ஓய்வூதியமாக ரூ.1750/–ம் வழங்கியதின் காரணமாகவும், 28.11.2019 முதல் கருணை ஓய்வூதியம் ரூ.3500/–லிருந்து ரூ.4000/–ஆக உயர்த்தியும், குடும்ப கருணை ஓய்வூதியம் ரூ.1750/–லிருந்து

ரூ.2000/−ஆக உயர்த்தி வழங்கியதின் காரணமாக இணையத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.9.98 கோடி கூடுதல் செலவாகிறது.

3) 01.10.2017 முதல் இணைய பணியாளர்களுக்கு 7−வது ஊதியக்குழு பரிந்துரையின் படி உயர்த்தி வழங்கியதின் காரணமாக இணையத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.12.03 கோடி கூடுதல் நிதி சுமை ஏற்பட்டுள்ளது.

4) இணையம் அரசுக்கு திரும்ப செலுத்த கூடிய வட்டியில்லா வழி வகை கடன், மத்திய காலக்கடன் மற்றும் நபார்டு வங்கிக் கடன் ரூ.150.13 கோடியை மாற்றி அமைத்து 2018−2019 ஆண்டு வரை அரசுக்கு செலுத்த வேண்டிய வட்டி தொகை ரூ.27.06 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு வருவாய் கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டது. மேலும், 25.02.2019 முதல் மாற்றி அமைத்த கடனுக்கு 10.5% வட்டியாக 25.02.2019 முதல் அரசுக்கு செலுத்த வேண்டியுள்ளது.

அதன் காரணமாக இணையத்திற்கு ஆண்டொன்றுக்கு நிதி சுமை ரூ.15.76 கோடியாக உள்ளது.

5) மொத்த பால் விற்பனையாளர்களின் வர்த்தக விளிம்பு லிட்டர் ஒன்றுக்கு ரூ.1.50/–லிருந்து ரூ.2.75/– ஆக உயர்த்தி 19.9.2019 தேதியிலிருந்து C&F ஏஜென்டுகளுக்கு வழங்கியதன் காரணமாக இணையத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.22.81 கோடி கூடுதல் செலவாகிறது.

6) 2019–2020ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாதம் ரூ.3500/–ம் குடும்ப கருணை ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.1750/–ம் 16.12.2016 முதல் வழங்கி வந்ததை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் பணியாளர்கள் சேம நல நிதியில் இந்திய வருமான சட்டத்தின் கீழ் பதிவு செய்து 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.125 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதால் இணையத்திற்கு 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.94.09 கோடி

இழப்பு ஏற்பட்டது. இல்லையெனில், இணையம் ரூ.31.56 கோடி இலாபம் அடைந்திருக்கும்.

## 12.4 கடன் விவரம்

(ரூ.கோடியில்)

| வ. எண். | விவரம் | இணையம் | மாவட்ட ஒன்றியங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தமிழக அரசு கடன் | 150.13 | 104.16 | 254.29 |
| 2. | நடப்பு மூலதன வங்கி கடன் | – | 112.81 | 112.81 |
| மொத்தம் | | 150.13 | 216.97 | 367.10 |

1. கொள்முதல் விலை உயர்த்தி, விற்பனை விலை உயர்த்தாத போது மற்றும் உட்கட்டமைப்பு ஏற்படுத்த அரசு வழங்கிய கடன் நிலுவை கீழ்கண்டவாறு:

    அ) 10 சதவீதம் வட்டி விகிதத்தில் மத்திய காலக்கடன் ரூ.24.50 கோடி

    ஆ) வட்டியில்லா வழிவகை கடன் ரூ.151.47 கோடி

இ) திருவண்ணாமலை பால்பவுடர் தொழிற்சாலை அமைக்க 6.5 சதவீதம் வட்டியில் ரூ.60.18 கோடி

ஈ) திருச்சி பாடலூரில் பால் பண்ணை அமைக்க வட்டியில்லா அரசு கடன் ரூ.18.14 கோடி

அரசாணை எண்.72, நிதித்துறை (கடன்(ம)முன் பணம்) நாள்.25.02.2019 படி மேற்கண்ட அனைத்து கடனும் 10.50 சதவிகிதம் வட்டியில் ஒரே கடனாக தொகுக்கப்பட்டுள்ளது.

2. நவம்பர்–2020ல் மாவட்ட ஒன்றியங்களில் பால் பவுடர் இருப்பு 16,499 மெட்ரிக் டன் மற்றும் வெண்ணெய் இருப்பு 5,739 மெட்ரிக் டன் ரூ.611.57 கோடி மதிப்பில் இருந்தது. பால் பொருட்கள் இருப்பின் பெயரில் வங்கியில் மூலதன கடன் ரூ.325.50 கோடி பெறப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பண நிலுவை ரூ.456.54 கோடியாக 71 நாட்கள் வரை உயர்ந்ததால், வங்கியில் 7% வட்டியில்

ரூ.325.50 கோடி பால் பவுடர் மற்றும் வெண்ணெய் இருப்பிற்கு கடன் பெற்று பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பண பட்டுவாடா செய்யப்பட்டது. கடனுக்காக நாளதுதேதி வரை ரூ.212.69 கோடி செலுத்தியது போக நிலுவைத் தொகை ரூ.112.81 கோடி உள்ளது.

3. மாவட்ட ஒன்றியங்கள், 15.08.2021 அன்று ரூ.438.70 கோடி மதிப்பில் 14,749 மெட்ரிக் டன் பால் பவுடர் மற்றும் 4,690 மெட்ரிக் டன் வெண்ணெய் இருப்பு வைத்துள்ளது. இணையத்தின் உபரி நிதி ரூ.49 கோடி, மாவட்ட ஒன்றியங்களின் உபரி நிதி ரூ.84 கோடி மற்றும் பால் பவுடர், வெண்ணெய் இருப்பு விற்று / சந்தைபடுத்தி அல்லது இருப்புக்கு கடன் பெற்று பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுபட வேண்டிய நிலுவை ரூ.201.87 கோடி மற்றும் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவை ரூ.112.81 கோடி வழங்கப்படும்.

## 12.5 சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் விற்பனை வருவாய்

### 12.5.1 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களின் விற்பனை வருவாய்

பிரதம பால் கூட்டுறவு சங்கங்களின் மூலம் நாளொன்றுக்கு 41 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதன் மூலம் கிராமப் பொருளாதாரத்தில் நாள்தோறும் ரூ.12.60 கோடி உட்கொணரப்படுகிறது.

### 12.5.2 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் விற்பனை வருவாய்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 2010–2011 ஆம் ஆண்டில் ரூ.1,533.39 கோடியாக இருந்த விற்பனை வருவாய் 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.4,763.35 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது, 210 சதவீதம் உயர்வு அடைந்துள்ளது. முந்தைய ஆண்டான 2019–2020 ஆண்டில் ரூ. 4,763.35

கோடி விற்பனை வருவாயுடன் ஒப்பிடும்போது 2020–2021 ஆம் ஆண்டிற்கான விற்பனை வருவாய் ரூ.5,119.61 கோடி ஆனது 7.5 சதவீத வளர்ச்சியாகும்.

### 12.5.3 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் விற்பனை வருவாய்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் விற்பனை வருவாய் 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.2,184.10 கோடி மற்றும் 2020–2021 ஆம் ஆண்டில் ரூ.2,291.80 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது 5 சதவீத வளர்ச்சியாகும்.

## 13. பல்வேறு அரசுத் துறைகளுடனான ஒருங்கிணைப்பு

பால்வளத் துறையானது, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மற்றும் தமிழ்நாடு கால்நடை

மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

## 14. பணியாளர் நலன் சார்ந்த நடவடிக்கைகள்

1. 2020–ஆம் வருடத்தில், 70 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய ஊழியர்களுக்கும் மற்றும் 159 இணைய பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டது.
2. இதேபோல் பால்வளத்துறையில் 24 நபர்களும், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 85 பணியாளர்களும் மற்றும் 80 நபர்கள் இணையத்திலும் பணியமர்த்தப்பட்டனர்.
3. கருணை அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டவர்களின் விபரம் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நிறுவனத்தின் பெயர் | வருடம் | பணியமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பால்வளத்துறை | 2020 | 1 |
| | 2021 | 2 |
| ஒன்றியங்கள் | 2020 | 5 |
| | 2021 | 0 |
| இணையம் | 2020 | 4 |
| | 2021 | 50 |

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பால்வளத்துறையில் பணிபுரிந்து கொரோனா பெருந்தொற்று காரணமாக உயிரிழந்த பணியாளர் ஒருவரின் வாரிசுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த 47 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினை 21.08.2021 அன்று வழங்கினார்கள்.

4. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற

பணியாளர்களுக்கும் தினந்தோறும் அரை லிட்டர் பால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

5. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.4,000 ஓய்வூதியத் தொகையாகவும் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை குடும்ப ஓய்வூதியமாக ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது.

6. பணியாளர்கள் பயன்பெறும் பொருட்டு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவை முறையே, பெங்களூருவில் செயல்பட்டு வரும் தேசிய பால்வள நிறுவனத்திலும், ஆனந்தில் செயல்பட்டு வரும் ஊரக வளர்ச்சி மேலாண்மை நிலையத்திலும், சென்னையில் நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம் மற்றும் அண்ணா

மேலாண்மை பயிற்சி நிலையம் ஆகியவற்றிலும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இணையத்தில் புதிதாக பணியில் சேர்ந்த அமைச்சுப் பணியாளர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அரசுப் பணியாளர் பயிற்சி நிலையத்தில் உரிய அடிப்படை பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7. 2020–21–ம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ. 27.30 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு ரூ. 12.50 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

8. 2020 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது கருணைத் தொகையாக ரூ.405.58 இலட்சம் இணையத்தின் 2,890 பணியாளர்களுக்கும், 25 மாவட்ட கூட்டுறவு

பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் 2,019 பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

9. 2020-ம் ஆண்டு தீபாவளி பண்டிகையையொட்டி இணையத்தின் 1,327 பணியாளர்களுக்கு ரூ.12.54 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும், ஓய்வு பெற்ற 2,170 பணியாளர்களுக்கு ரூ.4.55 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் தீபாவளி பரிசாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் 3,172 பணியாளர்களுக்கு ரூ.29.97 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும், ஓய்வு பெற்ற 2,763 பணியாளர்களுக்கு ரூ.5.80 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் தீபாவளி பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

10. 2020-2021 நிதியாண்டில் பொங்கல் பண்டிகையையொட்டி இணையத்தின் 1,325 பணியாளர்களுக்கு ரூ.8.67 இலட்சம்

மதிப்பிலான பால் பொருட்களும் ஓய்வு பெற்ற 1,975 பணியாளர்களுக்கு ரூ.5.23 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும் பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் 3,172 பணியாளர்களுக்கு ரூ.20.77 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும் ஓய்வு பெற்ற 2,763 பணியாளர்களுக்கு ரூ.7.32 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

## 15. பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் சேவைகள்

### 15.1 மாற்றியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி

- பால் உற்பத்தியாளர்களின் விசுவாசத்தினை ஊக்குவித்து தக்க வைக்கும் வண்ணமாகவும் அவர்களது சேவையை

மதிப்பளிக்கும் வண்ணமாகவும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் நலநிதி உருவாக்கப்பட்டு அதில் மாதந்தோறும் பால் ஊற்றும் பால் உற்பத்தியாளர்களின் பங்களிப்பாக ரூ.1–ம், தொடர்புடைய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பங்களிப்பாக தலா 0.50 பைசாவும் (ஆக மொத்தம் ரூ.2/–) பெறப்படுகிறது.

- விபத்தில் இறந்த பால் உற்பத்தியாளர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் விபத்தில் நிரந்தர ஊனமுற்ற சந்தாதாரர்களுக்கு இந்த நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது
- உறுப்பினர்களுக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 21.08.2021 அன்று 44 பயனாளிகளுக்கு ரூ.104.25 இலட்சம் மதிப்பிற்கான காசோலைகளை வழங்கினார்கள்

- இதுவரை (21.08.2021 வரை) 172 பயனாளிகளுக்கு ரூ.333.75 இலட்சம் விடுவிக்கப்பட்டது. தற்போது, ரூ.658 இலட்சம் நிதியிருப்பு உள்ளதால் எதிர்வரும் காலங்களில் இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் கேட்புகளை தீர்வு செய்ய பயன்படுத்திக் கொள்ளப்படும்.

தற்போது, தமிழக அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு, விபத்து அல்லது நிரந்திர ஊனம் ஏற்படும்பொழுது வழங்கப்படும் உதவித் தொகையினை ரூ.1.75 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக 12.11.2019 முதல் உயர்த்தி உள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>நிதி உதவி</th><th>நிதி</th></tr>
<tr><td>1</td><td>கல்விக்காக</td><td>ரூ.10,000 லிருந்து ரூ.25,000 என உயர்த்தப்பட்டுள்ளது</td></tr>
<tr><td>2</td><td>திருமணத்திற்காக</td><td>ரூ.10,000 லிருந்து ரூ.30,000 என உயர்த்தப்பட்டுள்ளது</td></tr>
<tr><td>3</td><td>இறுதி சடங்கு செலவினங்களுக்காக</td><td>ரூ.5,000</td></tr>
<tr><td colspan="3">உறுப்பினர்களின் பங்களிப்பு தொகையை உயர்த்தாமல், பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பணப்பலன்களில் மேற்படி உயர்வு அனுமதிக்கப்பட்டுள்ளது.</td></tr>
</table>

## 15.2 மானியத்துடன் கூடிய கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை வழங்குதல்

பால் உற்பத்தியாளர்கள் ஆவின் கால்நடை தீவனத்தினை கொள்முதல் செய்வதை ஊக்குவிக்க, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களானது, கால்நடை

தீவனத்திற்கு கிலோ ஒன்றுக்கு ரூ.2/- முதல் ரூ.5/- வரை மானியம் வழங்குகிறது.

தாது உப்புக் கலவைக்கு சங்க பணியாளர்களுக்கு ரூ.10/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலம் வழங்கப்படும் மானியமானது ஒன்றியத்தின் சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 2020-21ஆம் ஆண்டு 1,08,485 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும், 3,427 மெட்ரிக் டன் தாதுஉப்புக் கலவையும் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது, இவ்வாறு வழங்கியதில் ரூ.3,562.43 இலட்சம் கால்நடைத் தீவன மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ரூ.48.20 இலட்சம் தாது உப்புக் கலவை விற்பனைக்கான ஊக்கத் தொகையாக சங்க பணியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## 15.3 பால் உற்பத்தியாளர்களுக்கு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலமாக ஊக்கத் தொகை வழங்குதல்

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை போன்றே, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களால் ஈட்டப்பட்ட இலாப தொகையில் ஒரு பகுதியானது பால் உற்பத்தியாளர்களுக்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அந்த பால் ஊற்றும் உறுப்பினர்களின் பால் ஊற்றும் அளவின் அடிப்படையில் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.291.79 இலட்சம் ஊக்கத் தொகையானது கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் மூலமாக 1,317 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த 30,268 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 15.4 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பால் உற்பத்தியாளர்களுக்கு போனஸ் வழங்குதல்

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் இலாபத்தினை சங்க உறுப்பினர்களுடன் பங்கீடு செய்யும் அளவீடாக, 50 சதவீத இலாபத் தொகையானது பால் உற்பத்தியாளர்களுக்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் துணை விதியின் படி பங்குத் தொகை மற்றும் பங்கு ஈவுத் தொகை, ஆதரவு தள்ளுபடி விலை மற்றும் போனசாக பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலின் அளவீட்டிற்கு தக்கவாறு வழங்கப்பட்டு வருகிறது.

2020-21 ஆம் ஆண்டில் ரூ.1,111.70 இலட்சம் போனசாகவும், ரூ.9.86 இலட்சம் பங்கு ஈவுத் தொகையாகவும், ரூ.1,488.74 இலட்சம் ஆதரவு தள்ளுபடி விலையாகவும், 2.48 இலட்சம் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 15.5 பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை உள்ளீட்டு சேவைகள்

கூட்டுறவு அமைப்பின் கீழ் 16.89 இலட்சம் கால்நடைகள் தமிழகத்தில் உள்ளன. அவற்றில் பெரும்பான்மையாக கலப்பின ஜெர்சி கறவை மாடுகள் ஆகும். அவை ஒவ்வொன்றும் சராசரியாக நாளொன்றுக்கு 6.69 லிட்டர் பால் வழங்கி வருகின்றன. தற்போது பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, உயர் மரபணு காளைகளிடமிருந்து பெறப்படும் விந்தணுக்கள் செயற்கைமுறை கருவூட்டல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப் படுகின்றது.

பால்வளத் துறையானது கீழ்க்காணும் உள்ளீட்டுச் சேவைகளை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கி வருகிறது.

அ) இல்லம் தேடி வரும் கால்நடை சிகிச்சை

ஆ) இல்லம் தேடி வரும் அவசர கால சிகிச்சை

இ) செயற்கைமுறை கருவூட்டல் சேவைகள்

ஈ) மலட்டு நீக்க சிகிச்சை முகாம்

உ) கறவை காப்பீட்டு பாதுகாப்பு

ஊ) விரிவாக்க கல்வி மற்றும் சங்க பணியாளர்கள் / பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி

எ) கோடைகால அயர்சி மேலாண்மை

## 15.6 பால் உற்பத்தியாளர்களின் திறன் மேம்பாடு

மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கீழ்கண்டவாறு:

1. பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடுகள் மேலாண்மை, தூய பால் உற்பத்தி மற்றும் சமச்சீர் தீவனம் வழங்கும் திட்டத்தின் மூலம் தீவன வளங்களை திறம்பட பயன்படுத்துவது பற்றிய அறிவை பால் உற்பத்தியாளர்கள் பெற்றுள்ளனர்.
2. பல்வேறு பயிற்சித் திட்டங்கள் மூலம் பெறப்பட்ட அனுபவங்கள் மற்றும் அறிவியல் சார்ந்த முறையில் கறவை மாடுகளை பராமரிப்பது குறித்த பயிற்சிகள் பால் உற்பத்தியாளர்களுக்கு தினசரி சராசரி பால் உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது.

3. தீவன அளவை குறைப்பதனால், உற்பத்தி செலவு குறைந்து தினசரி நிகர வருமானம் உயர்ந்துள்ளது.

## 15.7 ஒன்றிய பயிற்சி நிலையங்கள்

இந்திய அரசாங்க கட்டுப்பாட்டில் CMU–AITI நிறுவனங்களின் கீழ் செயல்படும் மண்டல பயிற்சி நிலையங்களானது பால் உற்பத்தியாளர்களுக்கும், சங்க செயலாளர்களுக்கும், கிராம நிலை ஊழியர்களுக்கும் பல்வேறு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.

இந்த பயிற்சி வகுப்புகளானது தங்குமிடம், உணவு வசதிகள், கற்றல் சார்ந்த ஆதாரங்கள், கற்பி தல், காணொளி மற்றும் ஒலி வடிவ செய்தி உபகரணங்களை கொண்டது. மேலும் செய்முறைப் பயிற்சிகளுடன் கால்நடைகளை கொண்ட களப்பயிற்சி வகுப்புகளையும் கொண்டுள்ளது.

பயிற்சிகளை வழங்குவதன் மூலம் விவசாயிகள், கால்நடை மேலாண்மை

நடைமுறைகள், தூய பால் உற்பத்தி செயல்முறைகள் மற்றும் தீவன அபிவிருத்தி நடைமுறைகளைப் பற்றி சிறப்பான முறையில் தெரிந்து கொண்டுள்ளனர்.

## 15.8 தீவனக் கொள்கை

பசுந்தீவனமானது கறவை மாடுகளின் பால் உற்பத்தி பெருக்கத்திலும், இனப்பெருக்கத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இவை கறவை மாடுகளின் இனப்பெருக்கத்திற்கு தேவையான முக்கிய ஆதாரமான வைட்டமின் ஏ– சத்துகளை கொண்டுள்ளது. தற்போது கறவை மாடுகளில் பெரும்பாலும் வைக்கோல் மற்றும் சோளத்தட்டை போன்ற பயிர் பொருட்களைக் கொண்டு தீவனம் அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து கறவை மாடுகளுக்கும் தேவையான பசுந்தீவனத்தை இருப்பில் வைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனை அடையும் பொருட்டு கீழ்கண்ட உத்திகள் பரிசீலிக்கப்படுகின்றன.

1. தீவனப் பயிரிடுதலில் முதலீட்டை அதிகரித்தல்

2. பற்றாக்குறை, பஞ்சகாலம் மற்றும் கோடைகாலங்களில் தீவனத் தேவையினை சமாளிக்க ஏதுவாக சமூக தீவன வங்கிகளை உருவாக்கி தீவனத்தை ஊறுகாய்புல் முறையில் பராமரித்தல்

தீவனத்தின் உயிர்ச் சத்துக்களை அதிகப்படுத்துவதன் மூலம் அதன் ஊட்டச்சத்தினை அதிகரித்து கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறனை அதிகரிக்கவும் இனப்பெருக்கம் மற்றும் கறவை மாடுகளின் உடல் நலத்தினை பாதுகாக்கவும் ஏதுவாக இருக்கிறது.

## 16. பால்வளத் துறையின் எதிர்கால திட்டங்கள்

1. திரவ பால் விற்பனையில் வருடம் 10 சதவீதம் வளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டு, விற்பனை செய்யப்படும் பால் அளவினை

நாளொன்றுக்கு 30.00 இலட்சம் லிட்டராக உயர்த்துவது.

2. ஆவினின் சந்தை பங்கை தற்போதுள்ள 47 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாக அதிகரித்தல்.

3. உள்ளூர் சந்தையில், பால் பொருட்கள் விற்பனையில் 10 சதவீதம் வளர்ச்சியை அடைவதை நோக்கமாகக் கொண்டு தற்போதுள்ள பால் பொருட்கள் விற்பனை அளவான மாதந்தோறும் ரூ.45 கோடியிலிருந்து ரூ.50 கோடியாக உயர்த்துவது (மாவட்டம் மற்றும் இணையத்தில்).

4. மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் வளர்ச்சி விகிதத்தை 3 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக அதிகரிப்பதன் மூலம் பாலை கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் மற்றும் வெண்ணெய் ஆக உருமாற்றம் செய்வதால் ஏற்படும் இழப்பு குறைக்கப்படும்.

5. இந்த நிதியாண்டின் இறுதிக்குள் 200 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல் மற்றும் 200 எண்ணிக்கையிலான செயல்படாத / செயலற்ற சங்கங்களை ஒரு வருடத்திற்குள் செயல்படும் சங்கங்களாக மாற்றுதல்.

6. நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் நட்டத்தை குறைத்து, அவற்றை இலாபம் ஈட்டும் ஒன்றியங்களாக மாற்றுதல்.

7. அடுத்த ஐந்து ஆண்டுகளில், ஒரு கறவை மாட்டிலிருந் பெறப்படும் பாலின் அளவை நாளொன்றுக்கு தற்போதுள்ள 6.69 லிட்டரிலிருந்து 7.02 லிட்டராக உயர்த்துவது.

8. பாலில் போக்குவரத்து காரணமான இழப்புகளை தவிர்த்தல் மூலம் கூடுதல் இலாபத்தினை உறுதி செய்தல்.

9. கறவை மாடுகளுக்கான தீவனம் மற்றும் பிற அத்தியாவசிய உள்ளீடுகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

10. செயற்கை கருவூட்டல் மூலம் கருத்தரித்தல் விகிதம் 43 சதவிகிதத்தில் இருந்து 48.50 சதவிகிதமாக உயர்த்துதல்.

11. கால்நடை நலனை துறையின் முக்கிய நோக்கமாக கொண்டு கால்நடைகளை 100 சதவீதம் தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

12. சூரிய ஆற்றல் சக்தி மற்றும் மேகக் கணினி சார்ந்த தொலைநிலை கண்காணிப்பு அமைப்பு போன்ற புதுமையான அணுகு முறைகளைக் கொண்டு அமைப்பை வலுப்பெறச் செய்தல்.

## 16.1 நிர்வாக சீர்திருத்தங்கள்

- உற்பத்தியாளர்கள் நிலுவைத் தொகையை உடனடியாக செலுத்திட நடவடிக்கை

- செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல். இதன் மூலம் கூடுதலாக பால் உற்பத்தியாளர்கள் ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்குவார்கள். பால் கொள்முதலும் அதிகரிக்கும்
- அனைத்து பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் பொதுவான துணை விதிகள் உருவாக்குதல்
- பால் உற்பத்தியாளர்களுக்கு மாதந்தோறும் குறை தீர்க்கும் கூட்டம் நடத்துதல்
- பால் பவுடர் மற்றும் வெண்ணை மொத்த விற்பனை முறையில் சீர் திருத்தம் செய்தல்
- புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் உருவாக்க ஆய்வு மேற்கொள்ளுதல்
- ஆவின் நிறுவனத்தில் உள்ள மேலாளர் வரையிலான பதவியிடங்கள் அரசு ஆணைப்பெற்று தமிழ்நாடு தேர்வாணையம் (TNPSC) மூலமாக தேர்வு செய்தல் போன்றவை மேற்கொள்ளப்படும்

- இணைய வழி மூலமாக பால் அட்டை விற்பனை செய்தல்
- பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க ஆவின் நுகர்வோர்களை நியமனம் செய்ய ஒற்றை சாளரமுறை நடைமுறைப் படுத்தப்படும்
- ஆவின் முகவர்களுடைய உரிமம் இணைய வழியாக புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- தேசிய கூட்டுறவு பால் பண்ணை இந்திய அமைப்பு மூலம் பால்பவுடர், வெண்ணெய் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்களுக்கான விற்பனை மேற்கொள்வதைப் போன்று இதர பால் பொருட்களையும் இவ்வமைப்பின் மூலம் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- அனைத்து பாலகங்களிலும் பால் பொருட்கள் விற்பனை செய்வதற்கான இரசீது வழங்கப்படும்.

## 16.2 ஒழுங்குமுறை விதிகளை செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களை குறைத்தல் மற்றும் மின்னணு நிர்வாக செயல்பாடுகளின் மூலம் வணிகம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளை சுலபமாக்குதல்.

பொருளாதாரத்தில் போட்டியிடும் திறனை மேம்படுத்துதல், தமிழ்நாடு அரசின் மூன்று நிலைகளில் ஒரு பணி நிரலாக உள்ளது. பால்வளம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளில் ஒழுங்குமுறை விதிகளை எளிமையாகவும் திறம்படவும் செயல்படுத்தப்படுவதும் நிரலில் ஒரு முக்கிய அம்சமாக உள்ளது.

அதனடிப்படையில், இது குறித்து முன்னரே பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள சூழலில் இதனை செயலாக்கம் செய்வதில் கீழ்க்கண்டவை நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் செயல்படும் பால் பண்ணைகள் மற்றும் தொகுப்பு பால்

குளிர்விப்பான்கள் ஆகியவைகள் அமைப்பதற்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் உரிமம் பெறப்படுகிறது. இவை அனைத்திற்கும் தனித்தனியாக இல்லாமல் ஒட்டு மொத்தமாக அந்தந்த மாவட்ட ஒன்றியத்தில் ஒரே உரிமமாக பெறப்படுவதன் மூலம் நேரம் மற்றும் நிதி சேமிப்பு ஆகியவற்றிற்கு ஏதுவாக அமையும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்

- வருடாந்திர அடிப்படையில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் உரிமம் புதுப்பிக்கப்படுவதற்கு பதிலாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கும் வழிமுறை பின்பற்றப்படும்

கூட்டுறவு பால் பண்ணை தொழில் துறையில் வாணிப நடவடிக்கைகளை எளிதாக்கும் பொருட்டு கீழ்கண்ட புதிய முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

- இணைய வழியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்தல்
- இணைய வழியில் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர்களின் குறைகள் நிவர்த்தி செய்தல்
- பால் கூட்டுறவு சங்கங்களில் பால் பரிசோதனை வசதிகள், தானியங்கி பால் சேகர அலகுகள் (AMCU) நிறுவப்படுவதன் மூலம் மேம்படுத்தப்படும். இதன்மூலம் செயல்முறை எளிதாக்கப்படுவதுடன் பால் கொள்முதல் மற்றும் உறுப்பினர்களுக்கு பால் பணப்பட்டுவாடா வெளிப்படைத் தன்மை உடையதாக அமையும்
- கூட்டுறவு சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் பால் வழங்கும் போது பாலின் தரம், அளவு மற்றும் அதன் மதிப்பு குறித்து உடனடி பால் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்படும்
- பால் உற்பத்தியாளர்களுக்கு மின்னணு வாயிலாக பணப்பட்டுவாடா

- நல்லமுறையில் கறவை மாடுகளை பராமரிக்கவும், பால் உற்பத்தி செலவினை குறைக்கின்ற தொழில்நுட்ப அறிவினை குரல் ஒலி (Voice Message) மற்றும் குறுஞ்செய்திகள் (SMS) மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது
- இணைய வழி மூலமாக பால் அட்டை விற்பனை செய்தல்
- பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க ஆவின் நுகர்வோர்களை நியமனம் செய்ய ஒற்றை சாளரமுறை நடைமுறைப் படுத்தப்படும்
- ஆவின் முகவர்களுடைய உரிமம் இணைய வழியில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- இந்திய தேசிய கூட்டுறவு பால் பண்ணை அமைப்பின் மூலம் மின்னணு முறையில் பால்பவுடர், வெண்ணெய் போன்ற பால் பொருட்களின் விற்பனையை மேற்கொள்வதை போன்றே இதர பால்

பொருட்களையும் இவ்வமைப்பின் மூலம் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

- அனைத்து பாலகங்களிலும் பால் பொருட்களை விற்பனை செய்வதற்கான இரசீது வழங்கப்படும்
- சுற்றுப்புறச்சூழல் நிலையினை கருத்தில் கொண்டு காகிதம் இல்லாத முறையில் விற்பனை இரசீதினை நுகர்வோர்களின் கைபேசிக்கு நேரடியாக அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- மின்னாளுமை திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பால்பண்ணை நிர்வாக மேலாண்மை திட்டத்தின் முதல் கட்டமாக 21 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் இணைய வழியாக பால் உற்பத்தியாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அமல்படுத்தப்பட உள்ளது
- நேரம் மற்றும் எழுது பொருள் சேமிப்பிற்கு ஏதுவாக அலுவலர்களுக்கு முக அடையாளம் கருவி மூலம் வருகை பதிவேடு பராமரிக்கப்படும்.

- அனைத்து பால்பண்ணைகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்பு மேம்படுத்தப்படும்.
- பால் மற்றும் பால் பொருட்களின் தொடர் வினியோகத்தை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு மற்றும் நேரத்தை சிக்கனமாக்க, விநியோக இடங்கள் குறியீடு (Mapping) செய்யப்படும்.
- இணையம் மற்றும் ஒன்றியங்களில் "மின்னணு அலுவலகம்" (e–office) முறையில் கோப்புகள் கையாளும் முறை நடைமுறைப்படுத்தப்படும்.
- தமிழ்நாடு ஒப்பந்தபுள்ளி இணையதளத்தில், ஆவினுக்காக பிரத்தியேக இணையவழி மூலம் முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தும் வசதி உருவாக்கப்படும்.

## 16.3 நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள் மற்றும் பால்வளத்துறையின் நடவடிக்கைகள்

2015−ம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கொண்ட 2030ஆம் ஆண்டிற்குள் செய்யப்படவேண்டிய வளர்ச்சி குறித்த இலக்குகள் பற்றிய முன்மொழிவுகள், தற்போதும் எதிர் காலத்திலும், மக்களுக்கும் அனைத்து உலக நாடுகளுக்கும் அமைதி மற்றும் செழிப்புக்கான பகிரப்பட்ட வரைபடத்தை வழங்குகிறது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு 17 குறிக்கோள்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பால்வளத்துறையானது, வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள் எண்.2.0ன்படி பட்டினியை ஒழித்தல், உணவு பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்து மேம்பாட்டை எய்துதல் மற்றும் நிலையான வளங்குன்றா வேளாண்மையை ஊக்குவித்தல் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். மேலும், இத்துறையானது, இலக்கு எண்.2.3 மற்றும 2.அ அடைவதற்கு திட்டமிட்டுள்ளது.

குறிக்கோள் 2.3 2030–ஆம் ஆண்டிற்குள் கிராமப்புறங்களில் சிறிய அளவில் உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் குறிப்பாக பெண்கள், பழங்குடியினர், விவசாயத் தொழிலையே வாழ்வாதாரமாக செய்கின்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கறவை மாடுகள் வளர்ப்போருக்கு தங்களுடைய வருட வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்துடன் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அனைத்து பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகும். மேலும், மதிப்பு கூட்டிய பொருட்கள் உற்பத்திக்கு தேவையான வசதிகளை அதிகரித்தல் மூலம் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த வேலை வாய்ப்புகள் உருவாக்குதல் ஆகும்.

குறிக்கோள் 2(அ) வளரும் நாடுகளில் மற்றும் குறிப்பாக குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக கிராமப்புற உட்கட்டமைப்பு, விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணிகள், விவசாய பயிர்கள் மற்றும் கால்நடை மரபணு

வங்கிகளில் மேம்பட்ட சர்வதேச ஒத்துழைப்பு மூலம் முதலீட்டை அதிகரித்தல்.

## 16.4 இலக்குகளை அடைவதற்கான வருடாந்திர செயல்திட்டம்

- கூட்டுறவு அமைப்பின் கீழ் அதிக அளவிலான பால் உற்பத்தியாளர்களை கொண்டு வருதல்
- 'ஒரு வருடத்திற்கு ஒரு கன்று' என்ற இலக்கை அடைதல்
- சமச்சீர் தீவன முறையை நடைமுறைப் படுத்துதல்
- கறவை மாட்டுக் கடன்கள் வழங்குவதன் மூலம் கறவை மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்
- கறவை மாடுகளுக்கான காப்பீட்டுத் திட்டத்தினை விரிவான முறையில் நடைமுறைப்படுத்துதல்

- பால் உற்பத்தியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல்

- தூய பால் உற்பத்தி செய்வது தொடர்பாக பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்

- சங்கங்களில் தானியங்கி பால் கொள்முதல் நிலையத்துடன் கூடிய தொகுப்பு பால் குளிர்விப்பான்களை அதிக எண்ணிக்கையில் நிறுவுதல்

- அனைத்து நிலைகளிலும் பாலின் குளிர்நிலையை பராமரித்து பாலின் ஆரம்ப தரத்தை உறுதி செய்தல்

- அதிகரித்து வரும் பால் உற்பத்தியை எதிர்கொள்ள அனைத்து பால் பண்ணைகளின் கையாளும் திறனை அதிகரித்து கூடுதலான வசதிகளை உருவாக்குதல்

- ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பல்வேறு திட்டங்கள்

வாயிலாக பெறப்படும் நிதியினை பயன்படுத்தி அவற்றை செயல்படுத்துவதன் மூலம் பால் உற்பத்தியை பெருக்குதல்

இத்துறையானது, அரசாணை (நிலை) எண்.184, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, நாள். 26.12.2019–ன்படி வளங்குன்றா வளர்ச்சித் திட்டங்களை எய்துவதற்காக குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவானது, திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு துறை, மாநில மற்றும் மாவட்ட களப் பணியாளர்கள் மற்றும் இதர வளங்குன்றா வளர்ச்சித் திட்ட குழுக்களுடன் இணைந்து செயல்படும். இவ்வாறாக பல்வேறு திட்டங்கள் மூலம் பால்வளத்துறையானது, வளர்ச்சி திட்டங்களை எய்த திட்டமிட்டுள்ளது.

## 17. பால் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்

பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு அமைப்பில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்கள், அந்தந்த சங்கங்களின் தகுதி வாய்ந்த உறுப்பினர்களால் மக்களாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவால் நிர்வகிக்கப்படுகின்றன. 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் 1988–ல் தெரிவித்துள்ள வழிவகைகளின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும். இதர கூட்டுறவு சங்கங்களை போல் அல்லாது, பால் கூட்டுறவு சங்க நிர்வாக குழு உறுப்பினருக்கான தேர்தலில் பால் ஊற்றும் உறுப்பினர்கள் மட்டுமே போட்டியிடவும், வாக்களிக்கவும் முடியுமென்பதால், மற்ற கூட்டுறவுகளிலிருந்து பால் கூட்டுறவு தனித்துவத்துடன் செயல்பட்டு வருகிறது.

இதற்கு முந்தைய நிர்வாக்குழுவின் காலம் கடந்த ஏப்ரல் 2018ல் முடிவடைந்துள்ளது. புதிய நிர்வாகக்குழுவினை அமைப்பதற்காக 6,534

சங்கங்களில் நான்கு நிலைகளில் தேர்தல் முடிக்கப்பெற்றது. முதல் நிலையில், 6,298 பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் முடிக்கப்பெற்று நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அந்தந்த சங்கங்களில் பொறுப்பேற்றனர். இதர சங்கங்களில், நீதிமன்ற வழக்கு நிலுவை மற்றும் தகுதியான வாக்களர்கள் இல்லாத நிலை காரணமாக தேர்தல் நிறுத்தப்பட்டது.

இரண்டாவது நிலையில், 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலும் தேர்தல் நடத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் 23 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள் பொறுப்பேற்றுள்ளன. நீதிமன்ற வழக்குகள் காரணமாக, மதுரை மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஒன்றியங்களில் தேர்தல் நடவடிக்கைகள் முற்றுப் பெறவில்லை.

மூன்றாவது நிலையில், இணையத்திற்கான தேர்தல் நடவடிக்கை ஜனவரி 2019ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நீதிமன்ற வழக்கு காரணமாக தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

## 17.1 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் நிர்வாகக்குழுத் தேர்தல்

தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில், நிர்வாக இயக்குநர் குழுவின் பதவிக்காலம் ஏப்ரல்–2018ல் முடிவடைந்தது.
தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையத்திடமிருந்து பெறப்பட்டுள்ள பட்டியலின்படி நிர்வாகக் குழுவிற்கான தேர்தலை நடத்தி முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் தகுதி வாய்ந்த உறுப்பினர் யாரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய முன்வராததாலும் பல்வேறு நிர்வாக காரணங்களாலும் சில சங்கங்களில் செயல் ஆட்சியர் நியமிக்கப்பட்டுள்ளனர். இது போன்ற சங்கங்களுக்கு உரிய காலத்திற்குள் நிர்வாகக்குழு தேர்தல் நடத்திட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 17.2 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கான நிர்வாகக்குழுத் தேர்தல்

முதல் கட்டமாக பால் கூட்டுறவு சங்கங்களில் புதிய நிர்வாகக் குழு பொறுப்பேற்றதை தொடர்ந்து 15 ஒன்றியங்களுக்கான தேர்தலை நடத்த நடவடிக்கைகள் மேந்கொள்ளப்பட்டன. அதன்படி, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவானது, 23 மாவட்ட ஒன்றியங்களுக்கான நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டது. மதுரை மற்றும் தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தொடர்பான தேர்தல் வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையாக இருந்த காரணத்தால் மேற்படி இரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் மட்டும் தேர்தல் நடத்தி முடிக்க இயலவில்லை. இந்நிலையில், இந்த ஒன்றியங்களுக்கு செயல் ஆட்சியர் நியமனம் செய்யப்பட்டு நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் முடிவடைந்த பிறகு நீதிமன்ற தீர்ப்பின்

அடிப்படையில் மேற்காண் இரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு சங்க தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோசித்து தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 17.3 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கான நிர்வாகக் குழு தேர்தல்

மூன்றாம் நிலையில், தலைமைச் சங்கமான, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கான நிர்வாகக் குழு தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பணிகள் ஜனவரி – 2019 யிலேயே துவங்கப்பட்ட போதிலும், நீதிமன்ற உத்தரவின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நீதிமன்ற வழக்கு முடிவடைந்த நிலையில் இணையத்திற்கான தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது கொரோனா நோய் தொற்று பரவல் ஊரடங்கு காரணமாக தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனவே கொரோனா நோய் தொற்று பரவல் ஊரடங்கு முடிவடைந்த பின்னர்,

நிலுவையில் உள்ள இரு மாவட்ட ஒன்றியங்களுக்கான தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர் தமிழ்நாடு கூட்டுறவு சங்க தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோசித்து தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கான நிர்வாகக்குழு தேர்தலை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 18. முன்னேற்ற நடவடிக்கைகள்

- பசுந்தீவனம், கால்நடை தீவனம், தாது உப்புக்கலவை போன்ற உள்ளீடுகளை மானிய விலையில் வழங்கி, கால்நடை பராமரிப்பு செலவினத்தை குறைப்பதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலினை முழுவதுமாக கொள்முதல் செய்ய பால்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

- நிர்வாக செலவுகள் மற்றும் நடைமுறை செலவுகளை குறைத்து இலாபத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போதுள்ள எந்திரங்களை நவீனமயமாக்கி அவற்றின் செயல்திறனை அதிகரிப்பதன் மூலமும், பால் பண்ணைகளின் கையாளும் திறனை முழுமையாக உபயோகப்படுத்துவதன் மூலமும் செலவினங்கள் குறைக்கப்படும்.
- பால் பொருட்களின் காலக்கெடு காலத்தினை அதிகரிக்க நவீன தொழில்நுட்ப முறைகள் செயல்படுத்தப்படும்.
- பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத மற்றும் சாத்தியக் கூறுகள் உள்ள பகுதிகளில் புதிதாக தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அதிக பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- வெளிநாடுகளில் ஆவினின் டெட்ரா பால் மற்றும் பால் பொருட்களை ஏற்றுமதி

செய்வதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.

- பொது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பேருந்து நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க கவர்ந்திழுக்கும் கருத்திற்கினிய விளம்பரங்கள் செய்யவும், ஆவின் பாலகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- பால் உற்பத்தியாளர்களுக்கு கலப்படமற்ற சுத்தமான பால் உற்பத்தி செய்வது குறித்தான விழிப்புணர்வு பயிற்சிகள் அளிப்பதன் மூலம் கிராம அளவிலேயே தரமான பால் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- உற்பத்தி செய்யப்படும் அதிகப்படியான தீவனங்களை வறட்சி காலங்களில் பயன்படுத்துவதற்காக சேமித்து வைக்க தீவன வங்கிகள் உருவாக்கப்படும். இதற்காக, விவசாயிகளின் நிலத்தில் தீவனம் பயிரிட

தேவையான தீவன விதைகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் வழங்க ஏற்பாடு செய்து தர உத்தேசிக்கப்பட்டு ளது.

## 19. நிதி ஒதுக்கீடு

பால்வளத்துறைக்கான 2020-21 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்கில் ரூ.31.11 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதில், ரூ.31.11 கோடி, வருவாய் செலவினமாகும் மற்றும் ரூ.2,000 மூலதன செலவினமாகும். எனினும் பால்வளத்துறை திட்டங்கள் செயல்படுத்த வேண்டி 2020-21 ஆம் ஆண்டு இறுதி திட்ட மதிப்பீட்டில் ரூ. 46.18 கோடியாக உயர்த்தி அனுமதிக்கப்பட்டது.

தற்போது 2021-22 ஆம் நிதி ஆண்டிற்கு இடைக்கால நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் ரூ. 47.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், ரூ.47.55 கோடி ரூபாய் வருவாய் செலவினமாகவும் ரூ.2,000 மூலதன செலவினமாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பால் கூட்டுறவு சங்கங்களுக்கான தணிக்கைத்

துறை, நிதித் துறையின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு செல்லப்பட்டதால், பால் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கைத் துறைக்கான நிதி ஒதுக்கீடு இந்த துறையின் மானிய கோரிக்கையின் கீழ் வழங்கப்படவில்லை. எனவே, இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் குறைவு காணப்படுகிறது.

**2011–2012 முதல் 2021–2022 வரையிலான நிதி ஒதுக்கீடு**

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|
| 2011–12 | 65.72 |
| 2012–13 | 51.25 |
| 2013–14 | 35.97 |
| 2014–15 | 81.91 |
| 2015–16 | 98.18 |
| 2016–17 | 101.21 |
| 2017–18 | 118.63 |
| 2018–19 | 118.02 |
| 2019–20 | 246.84 |
| 2020–21 | 46.18 |
| 2021–22 (இடைக்கால நிதி ஒதுக்கீடு) | 47.55 |

## 20. முடிவுரை

பால்வளத் துறை, பால் உற்பத்தியாளர்கள் / விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல் மற்றும் பால் நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் குறைந்த விலையில் சிறந்த தரத்தில் பால் மற்றும் பால் உபபொருட்களை கொண்டு சேர்க்கும் நோக்கங்களை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அவற்றை செயல்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் மற்றும் உத்திகள் பரிசீலனையில் உள்ளன.


**சா.மு. நாசர்**


**பால்வளத் துறை அமைச்சர்**


## பால் கூட்டுறவுகள் குறித்த ஒரு பார்வை


| வ. எண். | பொருள் | விவரம் (15/08/2021 அன்று உள்ளபடி) |
|---|---|---|
| 1 | பால் கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | 10,511 |
| 2 | 2020–21ம் ஆண்டில் துவங்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் (எண்ணில்) | 6 |
| 3 | 2020–21ம் ஆண்டில் புத்துயிரூட்டப்பட்ட நலிவடைந்த சங்கங்கள் (எண்ணில்) | 5 |
| 4 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 19.91 |
| 5 | பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 4.25 |
| 6 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 41.00 |
| 7 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 25 |
| 8 | மாநில அளவிலான இணையம் | 1 |
| 9 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 38.23 |
| 10 | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 13.59 |
| 11 | மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 13.11 |
| 12 | ஒன்றிய பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 18 |
| 13 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 5 |


| வ. எண். | பொருள் | விவரம் (15/08/2021 அன்று உள்ளபடி) |
|---|---|---|
| 14 | ஒன்றியங்களின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 30.13 |
| 15 | இணையத்தின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 18.65 |
| 16 | பால் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 34 |
| 17 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 14.55 |
| 18 | மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கை | 591 |
| 19 | மொத்த பால் குளிர்விப்பான்கள் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 20.67 |
| 20 | மாவட்ட ஒன்றிய அளவிலான பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 403 |
| 21 | சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 173 |
| 22 | பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை (ஈரோடு, சேலம், மதுரை, தருமபுரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்) | 5 |
| 23 | பால்பவுடர் உற்பத்தித்திறன் (மெ.டன்/நாள்) | 90 |
| 24 | வெண்ணெய் சேமிக்கும் திறன் (மெ.டன்) | 4,629 |
| 25 | பால் பவுடர் சேமிக்கும் திறன் (மெ.டன்) | 7,805 |
| 26 | வெண்ணெய் இருப்பு (மெ.டன்) | 4,690 |
| 27 | பால் பவுடர் இருப்பு (மெ.டன்) | 14,749 |



தமிழகத்தில் பால் உற்பத்தியில் பங்களிப்பு
(சராசரி நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)
தனியார் பால் நிறுவனங்கள், 38
கூட்டுறவு அமைப்பு நிறுவனங்கள், 41
அமைப்பு சாரா நிறுவனங்கள், 114
வீட்டு நுகர்வுக்காக, 40
16%
18%
17%
49%



பால் கொள்முதல்
(சராசரி நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)
40.00
35.00
30.00
25.00
20.00
15.00
10.00
5.00
28.97
28.50
29.46
33.23
32.96
35.90
38.23
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
15 ஆகஸ்ட் 2021 வரை



கூட்டுறவு பால் பண்ணைகளின் குளிரூட்டும் மற்றும் பதப்படுத்தும் திறன்
(இலட்சம் லிட்டரில்)
60
50
40
30
20
10
0
32.57
11.79
14.25
37.82
13.04
14.25
43.22
15.14
14.25
43.86
15.19
14.25
48.36
16.87
14.25
48.78
20.67
14.55
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21
பால் பண்ணைகள்
மொத்த பால் குளிர்விப்பான்கள்
குளிரூட்டும் நிலையங்கள்


இணையத்தின் விற்பனை வருவாய் (ரூபாய் கோடியில்)
2400
2000
1600
1200
800
400
1681
1752
1860
2018
2184
2292
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21


மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின்
விற்பனை வருவாய் (ரூபாய் கோடியில்)
3458
3529
3618
3976
4763
5120
5000
4000
3000
2000
1000
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21


கால்நடை தீவன விற்பனை அளவு (மெட்ரிக் டன்)
120,000
100,000
80,000
60,000
40,000
20,000
0
58,652
60,770
81,531
91,691
95,153
108,485
2015 – 16
2016 – 17
2017 – 18
2018 – 19
2019–20
2020 – 21


கால்நடை தீவன விற்பனை வருவாய் (ரூபாய் கோடியில்)
250.00
200.00
150.00
100.00
50.00
0.00
99.71
112.42
150.83
169.63
189.35
210.94
2015 – 16
2016 – 17
2017 – 18
2018 – 19
2019 – 20
2020 – 21


தாது உப்புக் கலவை விற்பனை
விற்பனை அளவு (மெட்ரிக் டன்)
விற்பனை வருவாய் (ரூபாய் கோடியில்)
2020 - 21
3,427
17.14
2019 - 20
3,789
18.95
2018 - 19
2,872
14.36
2017 - 18
1,844
9.22
2016 - 17
1,315
6.57
2015 - 16
966
4.83
600
1200
1800
2600
3200
3800
5
10
15
20



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13.07.2021 அன்று பால்வளத்துறை சார்ந்த செயல்பாடுகளை ஆய்வு மேற்கொண்டார்கள்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.08.2021 அன்று, பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.08.2021 அன்று, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் பணிபுரிந்து, பணி காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்**




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.08.2021 அன்று, ஆவின் பால் மற்றும் பால் பொருட்களை வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்ய தேர்வு செய்யப்பட்ட மொத்த விற்பனையாளர்களுக்கு வணிக ஒப்பந்த ஆணைகளை வழங்கினார்கள்**



மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் துறை குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 16.05.2021 அன்று பால்பாக்கெட் விற்பனை விலையினை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைத்து மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் விற்பனையை துவக்கி வைத்தார்கள்



மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் சேலம் பால் பண்ணையில் கள ஆய்வு மேற்கொண்டார்கள்




தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பால் கொள்முதல்



**பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ சேவை**



**பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை தீவனம் வழங்குதல்**




ஆவின் அதிநவீன பாலகம்




ஆவின் பால் பொருட்கள்





ஈரோட்டில் அமைந்துள்ள ஆவின் கால்நடை தீவன ஆலை






**பால்பண்ணையில் பாக்கெட் பால் தயாரித்தல்**



பால்பண்ணையில் பால் பொருட்கள் தயாரித்தல்




தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்